விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை (25.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO


SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஜனநாயகம் ஏற்படுத்தப்படாவிடின்

# இலங்கையில் தமிழீழம் அமையும்!

## அப்துல் கலாமின் ஆலோசகர் தெரிவிப்பு

இலங்கையில்; இந்தியா, அமெரிக்காவில் உள்ளதைப் போன்ற ஜனநாயக அமைப்பு, நடைமுறை வராவிட்டால் நிச்சயம் தமிழீழம் அமையும். அதை யாராலும் தடுக்க முடியாது. அப்படி தமிழீழம் அமைந்தால் அது இந்தியாவின் நட்பு நாடாகவே திகழும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் ஆலோசகரான பொன்ராஜ் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெள்ளியன்று பதவியேற்பு

கிழக்கு மாகாண சபைக்கு தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினொரு உறுப்பினர்களும், எதிர்வருகின்ற வெள்ளிக் கிழமை காலை, சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்பார்கள் என அக் கட்சியின் நாடாளு மன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை நகர மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ள நிகழ்வொன்றின் போதே இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு இடம் பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் சிங்குடன் பேசவருமாறு கூட்டமைப்புக்கு இந்தியா அழைப்பு

(புதுடில்லி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்து சில நாட்கள் கழிந்துள்ள நிலையில், இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடனான பேச்சவார்த்தை உட்பட சில சுற்று பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக புதுடில்லிக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்திய அரசாங்கம் அழைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒக்ரோபர் 10-ம் திகதி புதுடில்லி வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சு அழைத்துள்ளதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது மட்டும்தான் நடந்துள்ளது. எதைப் பற்றிப் பேசுவார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என அவர் கூறினார்.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்த போது, இலங்கையில் தேசிய பிரச்சினையில் தமிழ்நாடு மட்டுமன்றி முழு இந்தியாவுமே அக்கறையாக இருப்பதை இந்திய பிரதமர் வலியுறுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

பல தசாப்தங்களாக தொடரும் இனப்பிரச்சினை மற்றும் இடம்பெயர்ந்த தமிழர்களின் புனர்வாழ்வு என்பவை (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் பேசுவதற்கு கூட்டமைப்பு தயார்

### விநாயகமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

அரசாங்கம் அழைத்தால் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு அரசு அழைத்தால் தமது கட்சி பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் 6 மாதங்களுக்கு மேல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், மீளவும் அழைத்தால் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தயார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளை நடத்த தமது கட்சி தயாராக இருந்த போதிலும், அரசாங்கம் தயாராக இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே (20ஆம் பக்கம் பார்க்க)

## மனிக்பாம் முகாம் மூடப்பட்டது

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கடந்த மூன்று வருடங்களாக யுத்தத்தினால் இடம் பெயர்ந்தவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த மனிக்பாம் இடைத்தங்கல் முகாம் நேற்றுடன் மூடப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் பாதுகாப்பிலும், சிவில் அதிகாரிகளின் நிர்வாகத்திலும் இயங்கிவந்த இந்த முகாமில் கடைசியாக எஞ்சியிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் மந்துவில் மற்றும் கேப்பாப்பிலவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 361 குடும்பங்களை 50 பேருந்துகளில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அதிகாரிகள் அனுப்பி வைத்தார்கள்.

இந் நிகழ்வை பார்வையிடுவதற்காக அங்கு சமூகமளித்திருந்த வன்னி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பொனி பஸ்பெரேரா, மனிக்பாம் முகாம் மூடப்படுவதை செய்தியாளர்களிடம் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், அரசாங்கத்தின் மீதும் இராணுவத்தின் மீதும் பழி சுமத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுவந்த உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற பதத்திற்கு இன்றுடன் முடிவேற்படுகிறது என வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பொனி பஸ் பெரேரா (19ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபையில் தமிழ் அமைச்சர்கள் இல்லை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைக்கு முஸ்லிம்கள் நால்வரும் சிங்களவர் ஒருவரும் அமைச்சர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை தமிழர்கள் எவருக்கும் மாகாண சபையில் அமைச்சுப்பொறுப்பு வழங்கப்படவில்லை.

37 உறுப்பினர்கள் கொண்ட கிழக்கு மாகாண சபையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உதவியுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

22 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஆளும் தரப்பில் 14 பேர் முஸ்லிம்கள், 6 பேர் சிங்களவர்கள், 2 பேர் தமிழர்களாவர்.

கடந்த முறை மாகாண சபையில் தமிழர் தரப்பில் முதலமைச்சரும் அமைச்சர் ஒருவரும் இருந்தனர். முஸ்லிம் தரப்பில் 2 அமைச்சர்களும் சிங்கள தரப்பில் ஒரு அமைச்சரும் இருந்தனர்.

அச் சமயம் ஆளும் தரப்பில் 7 தமிழர்கள் அங்கம் பெற்றிருந்தார்கள். ஆனால் இம்முறை இருவர் மட்டுமே அங்கம் வகிக்கிறார்கள் என்பது (19ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியீடு

(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படவுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற இப் பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வாரம் வெளியாகும் என அறிவிக்கபட்டிருந்த நிலையிலேயே இன்று முடிபுகள் வெளியாகின்றன.

பரீட்சை பெறுபேறுகளை மாணவர்கள் பரீட்சைத் திணைக்கள இணையத்தளமான www.doenets.lk என்ற முகவரியில் பார்வையிட முடியும். (எ)

## இராணுவத்தின் ஆட்சியே வடக்கில் இடம்பெறுகிறது

### விக்கிரமபாகு கருணாரட்ண குற்றச்சாட்டு

வடக்கில்சிவில்நிர்வாகம்நடைபெறவில்லை. முழுமையாக இராணுவ நிர்வாகமே நடைபெற்று வருவதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண குற்றம் சுமத்தியுள்ளார்.

உலகம் முழுவதும் வட பகுதி தமிழ் மக்களுக்கு சிவில் நிர்வாகம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்கிறது.

ஆனால் அங்கு நேரில் சென்று பார்த்தால் உண்மையை புரிந்துகொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கேப்பாபிலவில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை இராணுவம் பலாத்காரமாக பறித்தெடுத்துள்ளது. அதனை மக்களுக்கு வழங்குமாறு வலியுறுத்தி நாம் ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இதன்போது (19ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளபதி அட்மிரலாக தரமுயர்வு



கடற்படைத் தளபதி சோமதிலகதிஸாநாயக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அட்மிரலாக தரம் உயர்த்தப்பட்டுள்ளார். இதுவரை அவர் வைஸ் அட்மிரல் தர அதிகாரியாக இருந்தார்.

கடற்படை தளபதி சோமதிலக திஸாநாயக்க, அட்மிரலாக தரம் உயர்த்தப்பட்ட பின் கடற்படை தலைமையகத்திற்கு வந்தபோது 48 கடற்படை (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 2011/ 2012 இற்கான வருமான வரி கொடுப்பனவுகள் மற்றும் விபரத் திரட்டுக்கள்

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக்குரிய வரி மதிப்பாண்டு 2011/2012 இற்கான வருமான வரி விபரத்திரட்டுக்கள் அஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன்படி2011/2012ஆம் ஆண்டுக்கான உரிய வருமான வரிக் கொடுப்பனவுகள் 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைய, இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் விபரத்திரட்டுக்கள் இவ்வாண்டு நவம்பர் 30இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிக்கான திருத்தங்களின்படி வரியற்ற விடுதொகை மற்றும் வரிவீதங்களில் செய்யப்பட்ட மாற்றங்களை கவனத்தில் கொண்டு செலுத்த வேண்டிய வரித்தொகையை நிர்ணயிக்கவேண்டும். இதற்கான கையேடு வரிவிபரத் திரட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்படி பின்வரும் விடயங்களை வரிசெலுத்துவோர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

2011/2012 ஆண்டுக்கான வரியற்ற விடுதொகை தனிப்பட்ட ஊழிய வருமானம் தொடர்பில் 600,000 ரூபாய் ஆகவும் ஏனைய வருமானங்கள் தொடர்பில் 500,000 ரூபாய் ஆகவும் இருக்கும்.

**தனிப்பட்டவர்களின் வருமான வரிவீதம்**

| வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூபா) | வரி வீதம் |
|---|---|
| முதல் 500,000 | 4% |
| அடுத்த 500,000 | 8% |
| அடுத்த 500,000 | 12% |
| அடுத்த 500,000 | 16% |
| அடுத்த 1,000,000 | 20% |
| மீதி வரிவிதிக்கத்தக்க வருமானம் | 24% |

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கு தனிப்பட்டவராக இருப்பினும் அல்லது கம்பனிகளாயினும் ஆகக் கூடிய வருமான வரி 10% ஆகும். பொருட்களை வாங்கி விற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கோ அல்லது நிறுவன ரீதியற்ற முறையில் சேவை வழங்குநர்களுக்கோ இச்சலுகை வீதம் ஏற்புடையதல்ல.

600,000 ரூபாவை விஞ்சும் பங்குடமை வியாபாரத்தைப் பொறுத்தவரையில் அதன் பகிர்வுக்குரிய இலாபங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீது 8% வருமான வரி ஏற்புடையதாகும். மேலும் இவ்வாறு செலுத்தப்பட்ட பங்குடமை வரித் தொகையானது பங்காளர்களின் சம்பளத்தையும், உள்ளடக்கிய இலாப நட்ட விகிதங்களுக்கு ஏற்ப வரிவரவு (Tax credit)பங்காளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் ஆயின் அதன் வரி விதிக்கத்தக்க வருமானம் 5,000,000 ரூபாவிற்கு மேற்படாதிருப்பின் 15% வருமான வரியும், ஏனைய கம்பனிகள் 28% இலும் வருமான வரியைச் செலுத்தவேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGO) தமக்குக் கிடைத்த பெறுகைகளில் 3% இனை வரி விதிக்கத்தக்க வருமானமாகக் கருதி அதன் மீது 28% வருமான வரியை செலுத்த வேண்டும். இதன்படி மொத்தப் பெறுகைகளில் செயற்பாட்டு வீதம் 0.84% (3% x 28%) எனக் கருதிக் கொள்ளலாம்.

ஏதேனும் களரிகள் (Clubs) அல்லது கழகங்கள் தமது வரி விதிக்கத்தக்க வருமானம் மீது 10% வருமான வரியை செலுத்தவேண்டும்.

இவை தவிர, வியாபார அல்லது வர்த்தக இலாபங்களை வெளிப்படுத்துவோர் வரி விபரத் திரட்டுடன் தமது இறுதிக் கணக்கு கூற்றுக்களையும்இணைக்க வேண்டும். 2010 ஆம் ஆண்டில் இருந்து வியாபார மற்றும் வர்த்தக நிலையத்தில் ஒழுங்கான முறையில் கணக்குகளை பேணுவதன் முக்கியத்துவத்தை எமது திணைக்களம் வலியுறுத்தி வந்துள்ளது. அத்துடன் இது தொடர்பான கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை ஐந்து வருடங்களுக்கு பாதுகாப்பாக பேணி வர வேண்டியமை வரிச்சட்டங்களின் கட்டாயமானதாகும்.

மேலும் இறுதிக் கணக்குக் கூற்றுக்கள் பெயரளவில் இல்லாது விரிவான முறையில் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வியாபார முயற்சிகளை நடத்துவோர் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான கணக்குக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். அவ்வாறு சாத்தியம் இல்லை எனில் ஒரே கணக்குக் கூற்றில் வெவ்வேறு வியாபார முயற்சிகளின் கொள்வனவு மற்றும் விற்பனைகளை வெவ்வேறாகக் காட்டுதல் அவசியமானதாகும்.

ஏற்கெனவே காலாண்டு அடிப்படையில் சுயமதிப்பீட்டு முறையில் வருமான வரியை செலுத்தாதவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உரிய வரியைச் செலுத்துவதன் மூலம் தாமதத்திற்கான தண்டப்பணம் செலுத்துவதில் இருந்து தவிர்த்துக் கொள்ள முடியும்.

**பா. சிவாஜி**
**பிரதி ஆணையாளர்**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**
**யாழ். பிராந்திய அலுவலகம்.**

## வீதிப் பாவனை மாற்றியமைத்தல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் - இணுவில் - அன்னங்கை வீதியில் வீதி அகலிப்பு வேலைகள் நடைபெறுவதால், நாளை 26ஆம் திகதி தொடக்கம் 04ஆம் திகதி வரை இப்பாதையில் போக்குவரத்து செய்வதனை விடுத்து அக்காலப்பகுதி வரையில் சிவகாமி அம்மன் வீதியினை பாவிக்குமாறு நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் ப. வசந்தகுமார் தெரிவித்தார். (ஏ)

## பல்கலை ஆசிரியர்கள் நடைபயணம்

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்மேளனம் காலியிலிருந்து கொழும்பு வரை மேற்கொள்ளும் தொடர் நடைப் பயணத்துக்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களும் இன்று காலை 9.00 மணிமுதல் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் பிரதான நகரங்களில் ஒரு பிரசாரப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் இதனைக் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன. (ஏ)

## பாடசாலை மீது கழிவு ஒயில் வீச்சு இரு மாணவர்கள் கைதாகி விடுதலை

வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் முன் வகுப்பு கட்டடத்திற்கு கழிவு ஒயில் வீசி சேதமாக்கியதுடன் அங்கிருந்த குப்பைத் தொட்டிகளை எரித்து அட்டகாசம் புரிந்த சம்பவத்துடன் தொடர்புடைய அப் பாடசாலையின் இரு மாணவர்களை கடும் எச்சரிக்கையுடன் நேற்று நெல்லியடி பொலிஸார் விடுவித்தனர்.

சம்பவதினமிரவு குறித்த இரு மாணவர்களும் பாடசாலையின் காவலாளி முன் பக்கத்தில் இருக்க பின் மதிலால் ஏறி விழுந்து மேற்குறிப்பிட்ட அட்டகாசங்களைப் புரிந்துள்ளனர்.

இதனை அவதானித்த அருகிலுள்ள வீட்டு உரிமையாளர்கள் நெல்லியடி பொலிஸாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் குறித்த இரு மாணவர்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதியும் பாடசாலை அதிபர் மற்றும் வடமராட்சி கல்வி வலயத்தின் அறிவுறுத்தல்களுக்கமைவாகவும் குறித்த இரு மாணவர்களும் கடும் எச்சரிக்கையுடன் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். (ஏ-9,24)


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1975 . 05 . 05

உதிர்வு 2009 . 09 . 25



அமரர் கந்தசாமி கிருஷ்ணரூபன்

ஆண்டுகள் மூன்று சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவு
பரிதவிக்குதடா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

மகாத்மா வீதி, பண்டித்தறை,
நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்

(C-1155)



**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த




10.30, 2.30, 6.30, 9.30

(C-941)



**Maths (O/L)**

பிரத்தியேக /குழு

English/ Tamil/ Medium

உங்கள் வீட்டிற்கு வந்தே கற்பிக்கப்படும்

ஆசிரியர் : B.Sc

TP:- 0776701661

(481)


## சந்தேக நபர்களுக்கு 4ஆம் திகதி வரை விளக்க மறியல்

மன்னார் நீதிமன்றம் தாக்குதல் சம்பவம் மற்றும் மன்னார் நீதவானுக்கு தொலைபேசியூடாக மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மேலதிக நீதவான் ஆர். திஸாநாயக்க முன்னிலையில் மன்னார் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 43 சந்தேக நபர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் போது 43 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் ஆர். திஸாநாயக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, அமைச்சர் றிஸாட் பதியுதீன் மன்றிற்கு சமுகமளிக்கவில்லை.

இந்நிலையில், குறித்த வழக்கு விசாரணையினை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

அமைச்சர் றிஸாட் பதியுதீனுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை அவதானிக்கும் பொருட்டு ஜெனிவாவில் அமைந்துள்ள சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் தனது பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ-8)


**சரவணா றெக்ஸ்** எமது எந்த ஓர் கிளையிலும்

கையிருப்பு உள்ள வரை மட்டும்

Office Wear Sarees - 500/-
Silk Sarees with blouse - 500/-
Cotton Sarees with blouse - 500/- பெற்றுக் கொள்ளலாம்.

(C-1150)

770, 772, தட்டாதெரு சந்தி
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 021 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 1723

இல. 171, பிரதான வீதி,
சம்பத் வங்கி அருகாமை,
நெல்லியடி.
தொ.பே. : 021 226 2992

இல. 219, பிரதான வீதி,
சங்கானை.
HNB வங்கிக்கு முன்பாக.
தொ.பே. : 021 225 0909


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### சட்டமும் தண்டனையும்

ஒரு ஊரிலே வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் எதற்கெடுத்தாலும் சட்டம் பேசுவார். "சட்டத்தின் நுணுக்கம் எல்லாம் என் விரல் நுனியிலே வைத்திருக்கிறேன்" என்பார்.

"சரி அவர் விரல் நுனியில் அப்படி என்ன தான் சட்டத்தை வைத்திருக்கிறார் என்று பார்த்தேன்'' விரலில் நகம் தான் வைத்திருந்தார்... அதுவும் நீளம் நீளமாக வைத்திருந்தார்.

ஒருவேளை அந்தக்கூரான நகத்தைத்தான் "சட்டத்தின் நுணுக்கம்" என்று சொன்னாரோ என்னவோ தெரியவில்லை.

அவர் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். ஆனால், நாமெல்லாம் ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சட்டம் எனக்குத் தெரியாது என்று சொன்னால், அதைச் சட்டமே ஏற்றுக்கொள்ளாது.

**Ignorance of law is not an excuse!**

இரவு நேரத்தில் சைக்கிளில் வெளிச்சம் இன்றிப் பயணிக்கிறோம். பொலிஸார் நம்மை கைதுசெய்து கொண்டு போய் நீதிமன் றில் ஆஜர்படுத்துகிறார்கள்.

''அங்கே நாம்... வெளிச்சமின்றி சைக்கிளில் போவது பிழையென்று எனக்குத் தெரியாது" என்று சொன்னால், அதை அங்கே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்''

அதனால் சட்டம் எனக்குத் தெரியாது என்று சாதாரண மனிதன் கூட சொல்ல முடியாது. அதை சட்டம் ஏற்றுக் கொள் ளாது. சட்டம் தொடர்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

அதே மாதிரி ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்து விட்டு அந்தக் குற்றத்தை நான் நேரடியாகச் செய்யவில்லையே... அதனாலே என்னை விடுங்கள்'' என்று சொன்னால் கேட்க மாட்டார்கள்.

குற்றம் புரிந்தவர்களுக்குச் சட்டத்தின் கீழ் தண்டனை உண்டு. அத்துடன் குற்றம் புரிவதற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கும் தண்டனை உண்டு.

குற்றத்திற்கு உடந்தையாக இருக்கிறது என்றால் என்ன? அதற்கு சட்டம் என்ன சொல்கிறது தெரியுமா?

"ஒரு நபரை குற்றம் புரியுமாறு தூண்டுதல்; ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடி சதி வேலையில் ஈடுபட்டு அதன் விளைவாக ஒரு சட்டவிரோதமான காரியத்தைச் செய்வது; அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் இருப்பது; அல்லது செய்வதற்கு உதவி செய்வது ஆகியவற்றை "குற்றத்துக்கு உடந்தையாக இருத்தல்'' என்று சட்டம் சொல்கிறது.

விடயத்தை நேரடியாக ஒருவருக்கு வழங்கினாலும் ஒன்றுதான்; இன்னொருவரிடம் கொடுத்து கொடுக்கச் சொன்னாலும் ஒன்றுதான். தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

ஒருவன் தவறு செய்தான். அந்தத் தவறு சாதாரண தவறு அல்ல. பெரிய குற்றம். அதாவது கொலைக்குற்றம்.

ஒரு சிறுவன் தனது பெற்றோரை கொலை செய்து விட்டான். நீதிமன்றில் நீதிபதியால் அவனுக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

கடைசியாக நீதிபதி அவனைப் பார்த்து, "நீ கடைசியாக உன் தரப்பிலே ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்'' என்றார்.

"ஐயா! நீதிபதி அவர்களே! என் பெற்றோரை நான் தான் கொலை செய்தேன். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏதோ ஒரு ஆத்திரத்திலே அப்படி செய்து விட்டேன். இப்போது என் பெற்றோர் மீது அளவு கடந்த பாசம் ஏற்பட்டு விட்டது. இப்போது நான் அநாதை. எந்த நிமிடமும் நான் அவர்களின் நினைவாகவேயுள்ளேன். அதனாலே இதைப் பரிசீலனை செய்து என்னை விடுதலை செய்யுங்கள்'' என்றான்.

இவன் கூறிய அனைத்தையும் நீதிபதி அவதானமாகக் கேட்டு விட்டு கடைசியாக தீர்ப்பு சொன்னார்.

"இந்தச் சிறுவன் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளான். அதேநேரம் இப்போது தன்னுடைய பெற்றோர் மீது அளவு கடந்த பாசம் வைத்துள்ளான். அதை விட "அநாதை'' என்ற ஒரு நினைப்பு அவனது மனதை உறுத்திக் கொண்டு இருக்கிறது. இவை அனைத்தையும் கருணையோடு பரிசீலனை செய்து பார்த்ததில் அவனை அவனது பெற்றோர் இருக்கும் இடத்திற்கே அனுப்பி வைப்பது சிறந்தது... அதனால் மரண தண்டனை விதிக்கிறேன்'' என்றார்.

சிறுவனும் தனது பெற்றோரிடம் போய் சேர்ந்தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மனிதவுரிமைகள் மறுக்கப்படுமிடத்து மனிதவுரிமை ஆ.குழுவில் முறையிடுங்கள்

## மனிதவுரிமை ஆணையாளர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

உரிமைகள் மறுக்கப்படுமிடத்து மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுங்கள். தீர்வினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் பொலிஸ்மா அதிபரும் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் நாயகமுமான ரி.இ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகளினால் முன்னெடுக்கப்படும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் பொலிஸார் கடும் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

ஆனால், அதே கோரிக்கைகளை முன்வைத்து சிங்கள பெரும்பான்மையின கட்சிகள் இங்கு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் போது எந்தவித இடையூறும் விளைவிக்காமல் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

தமிழ்க்கட்சிகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை தடுக்கும் பொலிஸார் சிங்கள கட்சிகளுக்கு ஆதரவு வழங்குகின்றனர். இது தொடர்பில் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடமுடியுமா எனகேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதவுரிமைகளை பாதுகாப்பதற்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் மனிதவுரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் உள்ளன.

நான் இரண்டாவது முறையாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளேன். யாழ்ப்பாணம் பல முன்னேற்றங்களைகண்டுள்ளது.

மனிதவுரிமைகள் செயற்பாட்டிலும் முன்னேற்றம் உள்ளது. கடந்த 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

ஏனைய காலப்பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பிலும் விரைவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வாறு மனிதவுரிமைகளை பாதுகாப்பது தொடர்பான செயற்பாடுகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் அடக்கு முறைகள், உரிமை மறுப்புக்கள் இடம்பெற்றால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யுங்கள்.

உங்கள் முறைப்பாடுகளை ஆராய்ந்து சரியாக இருந்தால் உரிய நடவ்டிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திற்கு பரிந்துரைக்க முடியும். பொலிஸாருக்கும் அது தொடர்பில் அறிவுறுத்த முடியும் முறைப்பாடுகள் பதியப்படுமிடத்தே நாம் நடவடிக்கைகளை எடுக்க முடியும். எனவே, உரிமைகள் மறுக்கப்படுமிடத்து மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(அ-6-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 45 | 60 | 50 |
| தக்காளி | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 90 | 80 | 120 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 75 |
| பெரிய வெங்காயம் | 60 | 40 | 60 |
| பாகற்காய் | 90 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | '60 | 100 |
| பயற்றங்காய் | 70 | 60 | 60 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 45 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 30 | 80 | 40 |
| போஞ்சி | 65 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 120 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 210 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 30 | 28-30 |

## இராசி பலன்

*25.09.2012*

*(புரட்டாதி 09, செவ்வாய்க்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*

*தசமி முற்பகல் 11.43 மணிவரை*

*உத்தராடம் பிற்பகல் 3.01 மணிவரை*

*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*

*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*

**மேடம்** தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், பழைய வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்** மனக்குறை அகன்று மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடி கொள்ளும், முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** முயற்சிகளில் சற்று தாமதங்கள் ஏற்படலாம், செலவுக்கு பணம் போதாமலிருக்கலாம், உடல் நலம் சீராகும், பேச்சில் நிதானம் தேவை, கௌரவக்குறைவான நாள்.

**கடகம்** உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருவீர்கள், உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், உடல் நலம் சீராகும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** சுற்றத்தாரின் வருகையால் சுகம் கூடும் நாள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்கள் திருப்திகரமாக அமையும், பேச்சில் கனிவு பிறக்கும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** சகோதர ஒற்றுமை பலப்படும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**தனுசு** தனவரவுகள் திருப்திகரமாக அமையும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், மாதர் நட்புண்டு, வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தடைப்பட்ட காரியமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, புதிய பொருட்கள் வந்து சேரலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**கும்பம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், சயன சுகக்குறைவான நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், கூட்டு முயற்சி வெற்றி தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கலகலப்பான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புற்றுநோயை கண்டறியும் இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து காணப்படும் நிலையில் அந்நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்காக கொல் போஸ் கோப்வி எனப்படும் இயந்திரத்தினை உலக சுகாதார நிறுவனம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கவுள்ளதாக பணிப்பாளர் ஸ்ரீ.பவானந்தராஜா தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் இவ்வாண்டு அறிக்கையின்படி யாழ்ப்பாணத்திலேயே அதிகளவிலான புற்றுநோயாளர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த உபகரணமானது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உலக சுகாதார நிறுவனம் வழங்கவுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயின் தாக்கத்தினை ஆரம்பத்திலேயே. கண்டறிந்து அதனால் ஏற்படும் இறப்புக்களினை குறைத்துக் கொள்ள முடியும். பல மில்லியன் ரூபா பெறுமதியுடைய குறித்த உபகரணமானது உலக சுகாதார நிறுவனத்தின் கீழ் இயங்கும் புற்றுநோய் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட சர்வதேச முகவர் நிறுவனமே அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது.

இவ் உபகரணத்தின் மூலம் ஒருவருக்கு புற்றுநோய்த் தாக்கம் இருப்பதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அதற்கேற்ப சிகிச்சையளிக்கப்பட்டு புற்றுநோயினால் ஏற்படும் உயிரிழப்புக்களை ஓரளவிற்கு குறைத்துக் கொள்ள முடியும்.

இதுவரை இவ்வாறான ஆரம்ப நோய் நிலையை கண்டறிவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கே நோயாளர்கள் கொண்டு செல்லப்பட்டு வந்தனர். இதைவிட புற்றுநோயின் தாக்கத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படாமல் அது முற்றிய நிலையில் கண்டறியப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழப்புக்கள் இடம்பெற்றும் உள்ளன. இந்நிலையில் குறித்த உபகரணம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கிடைக்கவுள்ளமை வரப்பிரசாதம். மேலும் குறித்த உபகரணமானது எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு கையளிக்கப் படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.(அ-4)

## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான மஹோற்சவ காலங்களில் தினமும் இரவு 7.30 மணிக்கு தெய்வீகப் பேருரைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இத்தெய்வீக பேருரையில் இன்று செவ்வாய்க்கிழமை பன்முக நோக்கில் இராமன் எனும் தலைப்பில் யா/உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ்.செந்தூர்ச்செல்வன் சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-9)

# சூசையின் மனைவியை அழைத்து வந்த எனது மகனை கண்டுபிடித்து தாருங்கள்

## வயோதிபத்தாய் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைத்தளபதி சூசையின் மனைவி, பிள்ளைகளை அழைத்து வந்த தனது மகன் உயிரோடு இருப்பதாகக் கூறி அவரை கண்டுபிடித்து தருமாறு வயோதிபத் தாயொருவர் யாழ். மனிதவுரிமை காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இறுதி நேரத்தில் பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்ததோடு யுத்த சூனியப் பிரதேசங்களை விட்டு வெளியேறியும் இருந்தனர்.

இவ்வாறு சென்றவர்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைத்தளபதியான சூசையின் மனைவி, பிள்ளைகளும் சென்றதாக கூறப்பட்டது.

இவர்களை அழைத்துச் சென்றவர் தனது மகன் எனவும் அவரை தேடிக்கண்டு பிடித்து தருமாறும் கோரியே மனிதவுரிமை ஆணைக் குழுவில் வயோதிபத் தாயொருவர் முறையிட்டுள்ளார்.

தனக்கு ஒரேயொரு மகன் மட்டும் உள்ளான். தான் யுத்தம் முடிபுற்ற அதாவது 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனது மகன் இறந்து விட்டதாகவே நம்பியிருந்தேன். அதனால் ஆரம்பத்தில் எனது மகனை கண்டு பிடித்துத் தருமாறு யாரிடமும் முறைப்பாடு செய்யவில்லை.

எனினும் தற்போது சூசையின் மனைவி, பிள்ளைகள் உயிரோடு இருப்பதாக ஊடகங்கள் மூலமாகவும் செவி வழியாகவும் அறிந்துள்ளேன். இந்நிலையில் அவர்கள் உயிரோடு இருக்கும் போது அவர்களை அழைத்துச் சென்ற எனது மகனும் உயிரோடு இருப்பான் என்ற நம்பிக்கையில்தான் நான் மனிதவுரிமைக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்ய வந்துள்ளேன் என்றார்.

வடமராட்சி கிழக்கினை சேர்ந்த குறித்த வயோதிபத் தாய் கந்தசாமி விஜயபாலன் என்ற தன்னுடைய மகனின் புகைப்படத்தினையும் கிராமசேவகரின் உறுதிப்படுத்தலினையும் கொண்டு வந்திருந்தார். (அ-4)

# மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

## ஆணையாளர் பொலிஸாருக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

மனிதவுரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் ரி.இ.ஆனந்தராஜா இந்த விசேட கலந்துரையாடலில் பங்கு கொண்டிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகநேசன் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளும் பங்கு கொண்டிருந்தனர்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் பொலிஸார் அதிக அக்கறை செலுத்த வேண்டும். மக்களுக்கு எத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொலிஸ் நிலையத்தினையே நாடி வருகின்றனர்.

எனவே, மனித உரிமைகளைப் பாதுகாப்பதோடு மக்களுக்கான சேவையினை சரியான முறையில் செய்ய வேண்டும் என ஆணையாளரினால் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர பொதுமக்களுடன் நல்ல தொடர்பினை ஏற்படுத்தி அவர்களின் மொழியினை சரிவர அறிந்து நல்லெண்ணத்துடன் செயற்பட வேண்டும்.

அத்தோடு பாடசாலைகளில் மனித உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)




# நெடுந்தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் ஊடுருவல் காணப்படுவதாக தனக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இம் முறைப்பாடு நெடுந்தீவு கடற்றொழில் சமாசத் தலைவரிடமிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த கடற்பரப்பில் ஒரு வாரத்தில் மூன்று நாட்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு கடற்பரப்பில் நுழையும் இவர்கள் அங்குள்ள கடல் வளங்களினை அள்ளிச் செல்வதாகவும் மீனவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தான் மேலதிக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-4)


## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவும்

(யாழ்ப்பாணம்)

யா/வட்டு இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் அதிபர் சி.தனஞ்சயன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்திராக வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.நிகழ்ச்சி திட்ட அலுவலர் யூட் நிசாந்தன் அபிராமி, சங்கானை கோட்டக்கல்வி பணிப்பாளர் அ.சா. மரியாம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை சித்தன்கேணி தேவஸ்தான சபா வாசுதேவகுருக்கள், நிறுவுநர் நினைவுப்பேருரையை யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல்துறை தலைவர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். கிருபாஹரி இளங்கோவன் பரிசில்களை வழங்குவார். (அ)



தேசியமட்ட பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டியில் 15 வயது கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யா/இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும் 19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. இவ்வணியினருடன் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட பிராந்திய ஆணையாளர் எஸ்.எல்.டீன், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இரதோற்சவம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும். இவ் விழாவை முன்னிட்டு விசேட இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது

இதில் பாட்டு கனகாம்பரி சிவனேஸ்வரநாதன், மதுரா பரமேஸ்வரன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் சி.துரைராசா, முகர்சிங் எஸ்.நந்தகுமார் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# சகோதரத்துவவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வேம்பிராய் சத்திய ஞானக் கோட்டத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 5ஆம் திகதி வரை உலக சகோதரத்துவ விழா நடைபெறவுள்ளது.

இராமலிங்க வள்ளலாருடைய வருகையை (பிறப்பினை) ஒட்டி நடைபெறவுள்ள இவ்விழாவில் அகவல் பாராயணம் மற்றும் ஆறுதிருமுறைகளும் முற்றோதப்படும்.

அத்துடன் இந்தியாவிலிருந்து ஞானக் கோட்டத்திற்கு வருகை தரும் சாந்தி செல்வம் தம்பதிகளினால் ஒலிபரப்புச் சாதனங்களும் கையளிக்கப்படவுள்ளன. (அ-9-29)

# மாலினி பொன்சேகா பதவியை துறந்தார்



(கொழும்பு)

பிரபல நடிகை மாலினி பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கலைத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டும் நோக்கில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக் கட்சி மாலினி பொன்சேகாவிற்கு தேசியப்பட்டியல் ஆசனமொன்றை வழங்கியிருந்தது.

மாலினி பொன்சேகா நேற்றையதினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துள்ளார். சர்ச்சைக்குரிய முன்னாள் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்கவுக்கு அமைச்சுப் பதவியொன்றை வழங்கும் நோக்கில் மாலினி பதவி விலகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைய மாலினி இராஜினாமா செய்வதாகக் குறிப்பிடப்படுகிறது. பேர்டி பிரேமலாலுக்கு விரைவில் அமைச்சுப்பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மாலினி பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார் என ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் பந்துல ஜயசேகர கூறியுள்ளார். (அ-2)

YARL Properties

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com

# மன உளைச்சலால் 90 வீதமானோர் தற்கொலை

(கொழும்பு)

மன உளைச்சலால் பாதிக்கப்பட்ட 90 வீதமானோர் தற்கொலை செய்து கொள்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொள்ள முற்படுபவர்களின் 90 வீதமானவர்கள் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் என அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலைமையை நாட்டின் அனைத்து பாகங்களிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது என சுகாதார அமைச்சின் மனநோய் தொடர்பான நிபுணர் வைத்தியர் ரசாங்ஜலி கெட்டி ஆராய்ச்சி தெரிவித்தார்.

இவ்வாறு வைத்திசாலையில் அனுமதிக்கப்படுபவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பது முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# திருடர்கள் அகப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திருட முயன்ற ஒருவரையும் கராஜில் இரும்பு திருடிய ஒருவரையும் தாம் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இத்திருட்டு மற்றும் திருட்டு முயற்சி சம்பவங்கள் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கஸ்தூரியார் வீதியிலுள்ள எரிபொருள் நிலையத்தினை உடைத்து திருட முயன்ற நபர் ஒருவரையும் பருத்தித்துறை வீதி நல்லூர் பகுதியில் அமைந்துள்ள கராஜ் ஒன்றில் இரும்பு திருடிய ஒருவரையுமே தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விருவரும் யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (அ-4)

# மாகாணசபை விவகாரங்களில் அரசாங்கம் மூக்கை நுழைக்கிறது

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளுநர்களை பயன்படுத்தி சர்ச்சைக்குரிய திவிநெகும சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசிக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளுநரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு திவிநெகும சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சகல மாகாணசபைகளினதும் ஒப்புதலுடன் திவிநெகும திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கத்தின் இந்த முயற்சியானது அரசியல் சாசனத்திற்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பான கோட்பாட்டிற்கும் புறம்பானது. அதிகாரப்பகிர்வினை மேற்கொள்வதாக அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு தொடர் வாக்குறுதிகளை அளித்து வந்த போதிலும் மாகாண சபை விவகாரங்களில் அரசாங்கம் தலையீடு செய்து வருகிறது.

மாகாணசபைகளின் அதிகாரங்கள் வலுவிழக்கச் செய்யும் வரையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை காலம் தாழ்த்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்றார். (அ-2)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை துரிதப்படுத்துமாறு கோரப்படும்

## சுற்றுநிருபம் அனுப்புவார் ஷிராணி

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரய்ோகம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவது குறித்து அனைத்து மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்துவதற்கு பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தீர்மானித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசரிடம் தெளிவுபடுத்தியதனை தொடர்ந்து இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் பாலித பெனாண்டோ குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பிலான தகவல்களை பிரதம நீதியரசரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகளை நான்கு மாதங்களுக்குள் விசாரித்து நிறைவு செய்வதே இதன் நோக்கம் என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நான்கு மாவட்டங்களில் ஆறு மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 1<br>உயரம்:-5'11"<br>கி.பா:-15<br>தொழில்:-மருந்துக் கம்பனி முகாமையாளர்<br>B/432 | பிறப்பு:- 1981 RC குருகுலம்<br>நட்சத்திரம்:- சித்திரை 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-71, 8 இல் செவ்.<br>தகைமை:- A/L Ms Office HARD WARE<br>G/532 |
| பிறப்பு:- 1963 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-21<br>தொழில்:-கமம்<br>B/433 | பிறப்பு:- 1977 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-35, 7 இல் செவ்<br>G/526 |
| பிறப்பு:-1968 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம் 3<br>உயரம்:-5'4"<br>கி.பா:-16.5, 12 இல் செவ்.<br>தொழில்:-B.A.M.A. அரச நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>B/434 | பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'4"<br>கி.பா: 6, 12 இல் செவ்.<br>தொழில்:-HNDA நிர்வாக உதவியாளர்<br>G/017 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அத்தம் 3<br>உயரம்:-6'3"<br>கி.பா:-28.5, 4 இல் செவ்வாய்<br>தொழில்:- எலக்ரீசியன் குவைத்<br>B/436 | பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:- 79.25, 8 இல் செவ்.<br>G/019 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பில் அனைத்து மொழிகளிலும் இறுவெட்டுகள்

## வைகோ தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து அனைத்து மாநில மொழிகளில் இறுவெட்டு தயாரித்து மக்களிடம் கொண்டு செல்லப்படும் என்று வைகோ தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசம் சாஞ்சியில் நடந்த புத்தர் கோயில் விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். அவருக்கு கறுப்புக்கொடி காட்ட தொண்டர்களுடன் சாஞ்சிக்கு வைகோ சென்றார்.

பின்னர் வைகோவும் தொண்டர்களும் நேற்றிரவு சென்னை திரும்பினர். அவர்களுக்கு மேளதாளத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. அண்ணா சமாதியில் மலர் வளையம் வைத்து வணங்கிய பின் வைகோ பேசியதாவது,

தமிழகத்தை தவிர்த்து ஏனைய மாநில மக்களுக்கு இலங்கை பிரச்சினை குறித்தும் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்தும் அந்தந்த மாநில மொழிகளில் இறுவெட்டு தயாரித்து அந்த மக்களுக்கு கொண்டு செல்வோம் என்றார். (அ-2)

# மாலக்கவினால் தாக்கப்பட்ட புலனாய்வு அதிகாரி குற்றவாளி

## இராணுவ நீதிமன்றம் அறிவிப்பு

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா குழுவினரால் தாக்கப்பட்ட இராணுவ புலனாய்வு பிரிவின் அதிகாரி மேஜர் சந்தன பிரதீப் சுசேனவை இலங்கை இராணுவ நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்துள்ளது.

கொழும்பு தெற்குப் பகுதிக்கான இராணுவப் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியான மேஜர் சந்தன பிரதீப் போதைப்பொருள் கடத்தல் குழுதொடர்பான தகவல்களை திரட்டச் சென்றிருந்த போது மாலக்க சில்வா குழுவினரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

அவரது துப்பாக்கியும்' அக்குழுவினரால் அபகரிக்கப்பட்டது. இதையடுத்து மாலக்க சில்வா மீது முறைப்பாடு தெரிவித்த மேஜர் சந்தன பிரதீப் பின்னர் நீதிமன்ற விசாரணையின் போது அவர் தன்னை தாக்கவில்லை என்று கூறியிருந்தார்.

அதேவேளை குறிப்பிட்ட இராணுவ அதிகாரி தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்த இராணுவத்தளபதி மூன்று பேர் கொண்ட இராணுவ நீதிமன்றம் ஒன்றை அமைத்திருந்தார்.

இராணுவ மேஜருக்கு எதிராக விசாரணை நடத்திய அந்த நீதிமன்றம் அவரை குற்றவாளியாக அறிவித்துள்ளது. இராணுவ புலனாய்வு பிரிவு மேஜர் சந்தன பிரதீப் மேற்படி சம்பவத்தின் போது தான் பணியில் இருந்ததாக தெரிவித்திருந்த போதிலும் அவர் அதிகார பூர்வ பணியில் இருக்கவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவ நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து இலங்கை இராணுவத்தின் சட்டப்பிரிவிடம் இது தொடர்பான அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளது. அவர் இது குறித்து ஆராய்ந்து தனது கருத்தை தெரிவிப்பார். அதன் அடிப்படையில் இராணுவத்தின் சட்டப்பிரிவு மேலதிக நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பொது எதிர்க்கட்சியில் இணைவது குறித்து பொன்சேகாவிற்கு நிபந்தனை

## ஐ.தே.க.விதித்தது

(கொழும்பு)

பொது எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பில் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி நிபந்தனையொன்றை விதித்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சி தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் சரத் பொன்சேகாவின் கட்சி இணைந்து கொள்ளுமானால் இந்த நிபந்தனைக்கு இணங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலக்கப்பட்ட அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் உறுப்பினர்களை ஜனநாயக தேசிய கூட்டமைப்பில் இணைந்து கொள்ளக் கூடாது என்று அந்த நிபந்தனையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறான உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகி சரத் பொன்சேகாவின் கட்சியில் இணைந்து ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் செயற்படுவதற்கும் அதில் பதவிகளை பெற்றுக்கொள்வதற்கும் முயல்வதாக வெளியான தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிபந்தனை தொடர்பாக எதிர்க்கட்சி தலைவரினால் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் ஊடாக சரத் பொன்சேகா தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேள்ள ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு சரத் பொன்சேகா தலைமையிலான கட்சியினரை இணைத்துக் கொள்வது தொடர்பாக தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. (அ-2)

# கருவிகளுக்கு முத்திரையிடும் பணியை மீண்டும் மேற்கொள்க!

## வர்த்தகர்கள் கோரிக்கை

(புளியம்பொக்கனை)

கண்டாவளை பிரதேச வர்த்தகர்கள் தமது பிரதேசத்தில் மீண்டும் ஒருதடவை நிறுத்தல் அளவீட்டுக்கருவிகளுக்கு முத்திரையிடும் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்கள் சேவைகள் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த 10, 11, 12 ஆம் திகதிகளில் அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்கள் சேவைகள் திணைக்களம் மேற்படி பிரதேச வர்த்தக நிலையங்களின் அளவீட்டு கருவிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கையை கண்டாவளை பிரதேச அலுவலகத்தில் மேற்கொண்டனர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இச்செயற்பாட்டில் கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட பல வர்த்தகர்கள் அளவீட்டுக்கருவிகளுக்கு முத்திரையிட தவறியுள்ளனர்.

எனவே, மீண்டும் ஒரு தடவை இச்செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு கண்டாவளை பிரதேச வர்த்தகர்கள் கேட்டுள்ளனர். (அ-9-263)

# பெண்களுக்கு சுதந்திரமில்லை

## அனோமா

ஜனநாயகம் குறித்து உலகம் முழுவதும் கோசமிட்டாலும் பெண்களுக்கு சுதந்திரம் இல்லை என அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற பெண்கள் அமைப்பு ஒன்றின் கிளையை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். பெண்களுக்கு பேசும் உரிமையில்லை, எழுதும் உரிமையில்லை, ஜனநாயகம் என்று உலகம் முழுவதும் கோசம் போடுகின்றனர். உண்மையில் எமக்கு சுதந்திரம் இருக்கின்றதா என்பதை மனதில் நினைத்து பாருங்கள் என அனோமா பொன்சேகா கூறியுள்ளார். (அ-2)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 11 ஆயிரம் பேரின் அனுமதிப்பத்திரம் இரத்து

மதுபோதையில் வாகனத்தை செலுத்திய 11 ஆயிரம் பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டு ஆரம்பம் முதல் இது வரையில் மதுபோதையில் வாகனத்தை செலுத்திய 11 ஆயிரம் பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

குடிபோதையில் வாகனத்தை செலுத்திய 23 ஆயிரத்து 521 பேர் கைது செய்யப்பட்டதாகவும் இதில் 11 ஆயிரத்து 85 பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 45 சாரதிகளின் அனுமதிப் பத்திரங்கள் நிரந்தரமாகவே இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இந்த காலப்பகுதியில் 25 ஆயிரம் வாகன விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதகவும் இதில் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வாகன விபத்துக்களில் 13 ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர். (அ-2)





இறுதியுத்தத்தின் போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்த மக்களை கடந்த 3 வருடங்களுக்கும் மேலாக தங்க வைக்கப்பட்டிருந்த செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி நிலையம் நேற்றையதினம் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது. மக்கள் மீள்குடியேற்றத்திற்காக தயாராகி நிற்பதையும் மெனிக்பாம் முகாம் வெறிச்சோடி காணப்படுவதையும் படத்தில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்தவை அழைத்தால் மன்மோகனின் வீடு முற்றுகையிடப்படும்

## வைகோ எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் இந்தியாவிற்கு அனுமதித்தாலோ அழைப்பு விடுத்தாலோ இலட்சம் பேரை திரட்டிச் சென்று இந்திய பிரதமர் வீட்டை முற்றுகையிடவுள்ளதாக வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சாஞ்சியில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற புத்த மத விழாவில் பங்கேற்க வந்த இலங்கை ஜனாதிபதிக்கு கறுப்புக்கொடி கரட்டிச் சென்ற வைகோ கைதுசெய்யப்பட்டார்.

சென்னை திரும்பிய பின்னர் நேற்றையதினம் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய ம.தி.மு.க. செயலர் வைகோ இனப்படுகொலையை நடத்திய இலங்கை ஜனாதிபதியை மூன்று முறை பிரதமர் மன்மோகன் சிங் இந்தியாவிற்கு வரவழைத்துள்ளார்.

இந்த நடவடிக்கை இனியும் தொடருமேயானால் புகையிரதம், விமானம், பேருந்து என இலட்சம் பேர் திரண்டு சென்று பிரதமர் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம். இலங்கை ஜனாதிபதிக்கும் இந்திய அரசுக்கும் உள்ள கள்ளத்தொடர்பை அம்பலப்படுத்துவேன் என்றும் வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# 2 இலட்சத்து 62 ஆயிரத்து 960 பேருக்கு கடந்த வருடம் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2011 ஆம் வருட புள்ளி விபர அறிக்கையின்படி கடந்த வருடம் 2 இலட்சத்து 62 ஆயிரத்து 960 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர்.

இவர்களுள் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 90 பேர் பெண்களாவர். ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 670 பேர் ஆண்களாவர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு பிரதி முகாமையாளர் ஏ.கே. யூ. ரோஹன தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, குவைட், கட்டார், லெபனான், ஓமான், பஹ்ரைன், சைபிரஸ், தென்கொரியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கே இலங்கையர் இவ்வாறு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர்.

தொழில்சார் துறையைப் பொறுத்த வரையில் கணக்காளர், பொறியியலாளர், கடற்படை பொறியியலாளர், தகவல் தொழில்நுட்பம் போன்ற உயர் மட்டத்துறையிலும் மின்சார திருத்த வேலைகள், தாதிமார் மற்றும் உதவியாளர் போன்ற மத்தியதர வேலைகளுக்கும் குறித்த நாடுகளில் போதிய வேலைவாய்ப்புக்கள் இருப்பதாக பிரதி முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# புகையிரதத்தில் வைத்து தங்கச்சங்கிலி அபகரிப்பு

(பூந்தோட்டம்)

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி புகையிரதத்தில் சென்ற பெண்ணிடம் தங்கச்சங்கிலி திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து கொழும்பில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொள்வதற்காக மாலை புகையிரதத்தில் வந்த பெண் புகையிரதத்தின் யன்னல் ஓரமாக அமர்ந்திருந்தபோது மருதானையில் வைத்து யன்னல் வழியாக மூன்று பவுண் தங்கச்சங்கிலியை திருடன் அபகரித்துள்ளான்.

அவ்வாறான சம்பவங்கள் புகையிரதத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் பயணிகளை அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக புகையிரத காவலர்கள் அறிவித்தல்களை வழங்கி வருகின்றனர். (அ-266)

# பாருக் எம்.பியின் வாகனம் நேற்று விபத்துக்குள்ளானது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் உள்ளிட்ட குழுவினர் பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. சிலாபம்- பந்துலுஒய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இவ்வாகன விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் காயமடைந்ததுடன் அவருடன் வாகனத்தில் பயணித்த மேலும் 5 பேரும் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தில் உப்புக்குளம் மீனவர்களின் வழக்கு மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன், மன்னார் நீதவானை அச்சுறுத்திய வழக்கு என்பவற்றின் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அதில் பங்கேற்பதற்காகவே ஹுனைஸ் பாரூக் , 5 சட்டத்தரணிகளுடன் மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இதன்போது அவர்களின் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




★1513-ஸ்பானிய நாடுகாண் பயணி பாஸ்போ நூனியெத்தே பால்வோவா பசுபிக் பெருங்கடலை முதன்முதலில் கண்ட ஐரோப்பியர்.

★1690-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப்பத்திரிகை (Publick Occurrences Both Forein and Domestick) முதலும் கடைசித் தடவையாகவும் வெளிவந்தது. இது அரசினால் தடைசெய்யப்பட்டது.

★1789-அமெரிக்கக் காங்கிரஸ் அரசியலமைப்பிற்கு மனித உரிமைகளுக்கான 10 திருத்தங்கள் உட்பட 12 திருத்தங்களைக் கொண்டு வந்தது.

★1846-ஐக்கிய அமெரிக்கப் படைகள் சாச்செரி டெய்லர் தலைமையில் மெக்சிக்கோவின் மொண்டெரே நகரைக் கைப்பற்றினர்.

★1906-கரையிலிருந்து படகை 'வழி நடத்தும் முறைஸ் பெயினில் இயக்கிக் காட்டப்பட்டது. இதுவே தொலை இயக்கியின் பிறப்பு எனக் கருதப்படுகின்றது.

★1956-அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்த முதலாவது தொலைபேசிக் கம்பித் திட்டம் TAT-1 நிறுவப்பட்டது.

★1957- ஐக்கிய அமெரிக்காவில் ஆர்கன்சஸ் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9 கறுப்பின மாணவர்கள் 300 இராணுவத்தினர்களின் பாதுகாப்புடன் பாடசாலை சென்றனர்.

★1959-இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா சோமராம தேரர் என்ற புத்தபிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து மறுநாள் இறந்தார்.

★1962-அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.

★1978-கலிபோர்னியாவில் சான்டியாகோ நகரில் இரண்டு விமானங்கள் மோதிக் கொண்டதில் 144 பயணிகள் கொல்லப்பட்டனர்.

★1983-வட அயர்லாந்தில் 38 ஐரியக் குடியரசு இராணுவக் கைதிகள் சிறையை உடைத்து தப்பினர்.

★2002-குஜராத் மாநிலத்தில் இந்துக் கோயில் ஒன்றில் இடம்பெற்ற வன்முறையில் 32 பேர் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1897-வில்லியம் ஃபாக்னர், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1962)

★1899-உடுமலை நாராயணகவி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் (இ.1981)

★1976-சான்சி பிலிபஸ், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1986-நிக்கலாய் செமியோனொவ், ரஷ்ய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1896)

★2003-எட்வர்ட் செயிட், ஆங்கில ஒப்பாய்வுத்துறை அறிஞர்(பி.1935)

### உடுமலை நாராயணகவி



உடுமலை நாராயணகவி எனும் நாராயணசாமி முன்னாள் தமிழ்த் திரைப் பாடலாசிரியரும் நாடக எழுத்தாளரும் ஆவார். விடுதலைப் போராட்டத்தின் போது தேசிய உணர்வு மிக்க பாடல்களை எழுதி மேடை தோறும் முழங்கியவர்.

ஆரம்ப காலத்தில் நாடகங்களுக்கு பாடல் எழுதினார். இவருடைய பாட்டுகள் நாட்டுப்புற இயலின் எளிமையையும் தமிழ் இலக்கியச் செழுமையையும் கொண்டிருந்தன. 1933 இல் திரைப்படங்களுக்கு பாடல் எழுத ஆரம்பித்தவர். நாராயணகவி என்று பெயர் சூட்டிக் கொண்டு கவிஞர் இனமென்று தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர்.

ஆரம்பத்தில் ஆன்மீகப் பாடல்களை எழுதிய நாராயணகவி மகாகவி பாரதியாரின் நட்புக் குப்பின் பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதி அதன் மூலம் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர்.

ஏறத்தாழ பத்தாயிரம் பாடல்களை எழுதியுள்ள நாராயணகவி இயல்பாகவே இனிமையான சுபாவம் கொண்டவர். நேர்மையும் சொல் திறமையும் மிக்கவர். எவ்வகையிலும் தலை வணங்காத உறுதி உடையவர். பிறருக்கு உதவுகின்ற மனம் படைத்தவர். திரையுலகில் தமக்கென ஒரு மதிப்பையும் புகழையும் வைத்திருந்தவர்.

#### இளமை

1899 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பூளைவாடிச் சிற்றூரில் 24 மனைத் தெலுங்கு செட்டியார் இனத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி முத்தம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நாராயணசாமி ஆகும்.

இளம் வீயதிலேயே தம் தாய் தந்தையரை இழந்த நாராயணசாமி வறுமையில் உழன்றார். தனது தமையனார் தனுஷ்கோடியின் ஆதரவில் வாழ்ந்தார். சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கு தீப்பெட்டிகளைச் சுமந்து சென்று விற்றார்.

நான்காம் வகுப்போடு தனது பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டார் நாராயணசாமி.

#### சிறப்புக்கள்

கலைமாமணி என்னும் பட்டம் பெற்றார்.

#### மணி மண்டபம்

நாராயண கவி தம் 82 ஆவது வயதில் 23.05.1981 இல் மறைந்தார். இந்திய அரசு உடுமலை நாராயணகவி நினைவை போற்றும் வகையில் 31.12.2008 இல் இந்திய அஞ்சல் துறை அஞ் சல்தலை வெளியிட்டுள்ளது. தமிழ் நாடு அரசு இவர் வாழ்ந்த கோயம் புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் உடுமலை நாராயணகவி நினைவைப் போற்றும் வகையில் மணி மண்டபம் அமைத்துள்ளது. இங்கு உடுமலை நாராயணகவியின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவரது வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜனநாயகம் மலராவிட்டால்
# தமிழீழம் மலர்வதை தடுக்க முடியாது

## கலாமின் ஆலோசகர் பொன்ராஜ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கை, இந்தியா, அமெரிக்காவில் உள்ளதைப் போன்ற ஜனநாயக அமைப்பு நடைமுறை வராவிட்டால் நிச்சயம் தமிழ் ஈழம் அமையும். அதை யாராலும் தடுக்க முடியாது. அப்படி தமிழ் ஈழம் அமைந்தால் அது இந்தியாவின் நட்பு நாடாகவே திகழும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் ஆலோசகரான பொன்ராஜ் தெரிவித்துள்ளார்.**

அப்துல்கலாமின் ஆலோசகர் வெளியிட்டுள்ள இந்த அறிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக பொன்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

மத்திய பிரதேசம் மாநிலத்தில் புத்தமத பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்ட வந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கறுப்புக்கொடி காட்டுவதற்கு தமிழகத்தில் இருந்து வைகோ தலைமையில் பலர் சென்று அங்கு கைதாகியுள்ளனர். இதுபோன்ற ஒரு போராட்டம் உலக வரலாற்றில் இதுவரை நடந்தது இல்லை.முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் காலம் முதல் இலங்கை தமிழர்களின் அகிம்சை வழி மற்றும் ஆயுதம் ஏந்திய போராட்டங்களின் வரலாற்றை உயர் அதிகாரிகள் திரித்துக் கூறி வருகின்றனர்.

இதனால் பெரும்பான்மையான வட மாநில தலைவர்கள், ஈழத்தமிழர்கள் இலங்கையின் பூர்வீக குடி மக்கள் இல்லை என்று தவறாக நினைத்து கொண்டிருக்கின்றனர். ஆனால், புராண காலம் முதல் இலங்கையில் தமிழர்கள் வசிக்கின்றனர் என்பதை இராமாயணம் நிரூபிக்கிறது.

எனவே, இலங்கை அரசின் மனித தன்மையற்ற செயலையும் ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்தையும் நாமெல்லாம் ஒருங்கிணைத்து செயற்பட்டு வட மாநில தலைவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இந்த பணியை வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக செய்து முடிக்க வேண்டும். இல்லையென்றால் நாட்டின் முக்கிய பொறுப்புக்கு வரவுள்ள அடுத்த தலைவருக்கும் இலங்கை தமிழர்களின் போராட்டத்தை உயர் அதிகாரிகள் திரித்துக் கூறி விடுவார்கள். இதனால் புதிதாக தலைமை ஏற்கும் தலைவரும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடக்கூடும்.

எனவே, தமிழக அரசியல் தலைவர்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டு இலங்கையுடன் இந்தியா மேற்கொண்டு வரும் வெளிவிவகார கொள்கைகளை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும். ஜனநாயக முறையை அமுலுக்கு கொண்டு வர இலங்கைக்கு கொஞ்சம் கூட விருப்பம் இல்லை.

பொதுத் தேர்தலில் தமிழ் தலைவர்கள் வெற்றி பெறுவதை தடுக்கும் விதமாக தமிழர்கள் குடியிருப்பு பகுதிகளில் எல்லாம் சிங்களவர்களை குடியமர்த்துகின்றனர்.


தமிழர்கள் ஆயுதம் ஏந்தியதற்கு இலங்கை அரசுதான் முக்கிய காரணம். விடுதலைப்புலிகளை தவிர உலகில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் ஒழுக்கம், தியாகம் கொண்ட முப்படை இராணுவத்தை கொண்டிருக்கவில்லை.

இந்தியாவை தூண்டில் போல் பயன்படுத்திக்கொண்டு அரசியல், பொருளாதார இராணுவ உதவிகளை எல்லாம் இலங்கை பெற்று அனுபவிக்கிறது. அதே நேரம் சீனாவின் தீவிர நட்பு நாடாக இலங்கை திகழ்கிறது.

இலங்கையுடன் பொருளாதார உறவுகளை கொண்டுள்ள சீனா எதிர்காலத்தில் இராணுவத்தளத்தை இலங்கையில் அமைக்கும். எனவே, இலங்கைக்கு இந்தியா உதவி செய்வதை நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அது உள் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அதே நேரம் இலங்கையில் அரசியல் தீர்வு காண இந்தியா முயற்சித்தால் அதை ஒருபோதும் சீனா எதிர்க்காது. எனவே, இலங்கையில் ஜனநாயகம் மலர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த தேசத்தின் நல்ல மனிதர்களுடன் என் தனிப்பட்ட கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காக இதையெல்லாம் கூறுகிறேன் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார். (அ-2)

# வண்ணை வேங்கடவனின்
# தேர்த்திருவிழா இன்று



இராஜகோபுர மண்டபத்தில் வைத்து பட்டு உத்தரியம் சாற்றப் பெற்று மாலை அணிவித்து சுகந்த சந்தனம் வழங்கி உபசரிக்கப்படுகின்றார். இதை தந்த உற்சவம் என்று அழைப்பர்.

இதன்பின் இரதத்தில் ஆரோகணித்து வீதி வலம் வருகின்றார். பின்பு இரதத்தினது அவரோகணித்து வீதி வலம் வருகின்றார். பின் கோவிலின் உள் வீதியை அடைந்தும் பகவான் பூரண கும்ப இராஜ மரியாதையையும் பாதத் தீர்த்தத்தையும் ஏற்றுக் கொண்ட பின் வசந்த மண்டபத்தையடைந்து தீபாராதனை

வைணவம் சார்ந்த வைகாசன ஆகம விதிமுறைகளுக்கு இணங்க யாழ்.நகரில் ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன் செகராசசேகரனின் காலத்து சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தே உடைய சிறப்புக் களை உணர்த்துகின்றது.

**மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்**
**பணிப்பாளர், சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

இன்றைய இரதோற்சவ விழா உணர்த்திடும் தத்துவமானது சிருஷ்டி, திதி, சம்காரம், திரோபவ, அனுக்கிரக என்ற பஞ்ச கிருத்தியங்களில் சம்காரத்தைக் குறிக்கும் உற்சவமாகும். இவ்வுற்சவத்திற்கு பகவான் மிக அலங்கார பூஜிதராக எழுந்தருளி வருகின்றார்.

எழுந்தருளும் சுவாமிக்கு யைப் பெற்று மகா ஆசீர்வாதப் பூஜையை ஏற்ற பின் இவ் விழா நிறைவுறுகின்றது. அன்றைய தினம் இரவு தேரடி உற்சவம் நிகழும். மிகச் சிறப்பாக ஆண்டு தோறும் நடைபெறுகின்ற இவ்வாலய தேர்த்திருவிழாவில் நாமும் கலந்து கொண்டு அருளாசி பெறுவோமாக!

# பேருந்துகளில்
# தமிழ், சிங்களமொழிகளில்
# பெயர்ப்பலகை இருக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச்சபை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஆகியவற்றுக்கு சொந்தமான அனைத்து பயணிகள் பேருந்துகளிலும் தமிழ் மற்றும் சிங்களத்தில் பயணிக்கும் ஊர்கள் உள்ளிட்ட விடயங்கள் இருக்க வேண்டியது கட்டாயம் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச மொழிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சட்ட ரீதியான தேவை எனவும் அமைச்சு கூறியுள்ளது. பல பேருந்துகள் இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சட்டத்தை செயற்படுத்த பேருந்துகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த சாரதிகளுக்கு எதிராக 6 மாத சிறை தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## வண்ணை வரதராஜா தேரேறி வருக!

வரத வெங்கடேசா வண்ணைப் பதி வாசா
கண்ணா தேரேறி வருக!
விண்ணும் மண்ணும் அளந்த வேத சொரூபனே
மாயவா தேரேறி வருக!
பன்னக சயன பதமருள் முகில் வண்ணா
பரந்தாமா தேரேறி வருக!
புண்ணியனே புவன நாயகனே கார்மேக
வண்ணனே தேரேறி வருக!
நாலுறை சாத்திரங்கள் புகழ்பாடும்
நாராயணா தேரேறி வருக!
மண்ணுலக மாந்தருக்கு வரமருளும்
வரத ராஜா தேரேறி வருக!

க.லோகேஸ்வரன் (தொல்புரத்தூர்)

வட மாகாணத்தில் முதல் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ் L
(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)
பெண்களுக்கு: நவீன காரில் பயிற்சி வழங்கப்படும் 021 492 3200 (கவிதா)
தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353 0777225291, 0777225292
கிளை :- சுன்னாகம் கே.கே.எஸ் வீதி மதவடி முன்பாக T.P:- 021 224 2022 0714546956
கிளை :- நெல்லியடி T.P:- 021 300 6550 0714546957
கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515 0714546955
கிளை :- பருத்தித்துறை T.P:- 0214923201 0714546958
கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி T.P:-0777744424 0212270700
கிளை :- கிளிநொச்சி T.P:- 021 228 5505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


51

## ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் ஆட்சியும் அதன் பின்னரும்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

**உதயன்**

சேனனுக்குப்பின்னர் ஆட்சிப் பீடமேறியவன் யுவராஜா உதயன் ஆவான். தனது சகோதரன் மகனான காசியப்பனை மாஆதிபாதப் பதவிக்கு நியமித்தான். (பிரதம ஆளுநர்) பௌத்த சமயத்துக்குப் பல பணிகள் செய்தான். பிராமணர்களுக்குத்



பண்டைய தமிழர் போர்க் கருவிகள்

தானம் வழங்கிக் கௌரவித்தான். ஆட்சியுரிமையில் பாரபட்சம் காட்டுவதாக நினைக்கக்கூடாது என்பதற்காக இன்னோர் சகோதரன் காசியப்பனை அழைத்து, யுவராஜா காசியப்பனின் ஒரு மகளான சேனாவை அவனும் இன்னொரு மகளா தீஸ்ஸாவை தானும் மனைவியாக்கிக் கொண்டனர்.

உபராஜாவான மகிந்தனுக்கும் இளவரசி கீர்த்திக்கும் பிறந்த கித்தக்கபோதி என்பவன் தனக்குரிமை கிட்டாததால் ஏமாற்றமுற்று அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சியாளனாக மாறி உருகுணைக்கு இரவோடு இரவாக ஓடித் தலைமறைவாகினான். கித்தக்கபோதி அங்கு மக்களைத் தம்வசமாக்கி உருகுணை மன்னனான மாமனைக் கொன்று இராச்சியத்தைத் தனதாக்கிக் கொண்டான். இதனைக் கேள்வியுற்ற அனுராதபுர மன்னன் அடங்காக் கோபமுற்று கித்தக்கபோதியை தலைநகருக்கு அழைக்க முடிவு செய்தான். அவன் தனது சகோதரன் காசியப்பனை (யுவராஜா வல்ல) அழைத்து, "நீ எனக்கு உதவ வேண்டும்" எனக்கேட்க காசியப்பன் "அரசே எவ்வாறு?" என வினாவினான். அரசன்; அதற்கு, "உனது மகனான மகிந்தனே ஆட்சிக்கு இரத்த உருத்துடையவன். அவன் வயதுக்கு வந்துள்ளான். பலசாலியும் புத்திசாலியுமாவான். ஆட்சிக்காலத்தை நடத்தும் திறன் அவனுக்குண்டு. போர் நடத்தும் திறனுடையவன். அவனைப் படையோடு உருகுணைக்கு அனுப்பி தன் மாமனைக் கொன்ற துரோகியை, கித்தக்கபோ தியை சிறைப்பிடிக்க வேண்டும்." என்றான். "எனது மகன் எதற்கு? நானே உருகுணைக்குப் படையுடன் செல்கிறோன்" என்றபோது அரசன் மனமகிழ்வுடன் சம்மதித்தான். பெரும் சேனை ஒன்று ஆயத்தமாகியது.

இளவரசன் மகிந்தனே தலைமை தாங்கிச் செல்வதென முடிவாகியது. மன்னன், வஜ்ரராஜா எனும் படைத் தலைவனை அழைத்து "இளவரசன் மகிந்தனைக் கண்ணும்கருத்துமாகப் பாதுகாப்பது உன் கடமை" எனப் பணித்தான். உருகுணை நோக்கி அனுராதபுர மன்னனின் சைனியம் புறப்பட்டது. உருகுணைத் தலைவர்களும் இச்சேனையுடன் இணைந்து கொண்டனர். கித்தக்கபோதியின் படை முறியடிக்கப்பட்டு தோல்வியைக் காண, அவன் விலை மதிப்பில்லா அரண்மனைச் செல்வத்துடன் மலையசேத்தியத்திற்கு ஓடிச்சென்றான். அவனைப்பின் தொடர்ந்த மகிந்தன் மலையதேசத்தைச் சல்லடையிட்டுத் தேடிய போதுதான் கவர்ந்து வந்த திரவியங்களை கித் தக்கபோதி கங்கையில் எறிந்துவிட்டு ஒரு குகைக்குள் மறைந்தான். அதனைக் கண்ட மக்கள் அவனைப் பிடித்து மகிந்தனிடம் ஒப்படைத்தனர். அவனைச் சிறைப்படுத்தியவாறு சேனாதிபதி வஜ்ரராஜாவிடம் கையளித்துவிட்டு உருகுணையின் தலைநகரான மகாகமத்திற்கு வந்து உருகுணையின் மன்னனாக முடிபுணைந்து கொண்டான் என்கிறது சூளவம்சம். சேனாதிபதி வஜ்ரராஜா, கித்தக்கபோதியைச் சிறையெடுத்துக்கொண்டு ஒரு பகுதி சேனையுடன் அனுராதபுரம் திரும் பினான். அங்குகித்தன்கபோதி கடுங் காவல் சிறையிலிடப்பட்டான். பல விகாரைகள் அமைத்தான். கதம்ப நதியில் மேயூத் திக்குளத்தை அமைப்பித்தான். தனது பதினோராவது ஆண்டு ஆட்சியின் பின்னர் மரணமடைந்தான்.

**காசியப்பன்**

அரசனின் மரணத்தின் பின் யுவராஜாவாகவிருந்த காசியப்பன் முடிசூடிக் கொண்டான். தனது பட்டத்து மகஷியான திஸ்ஸாவின் தந்தையான காசியப்பனை யுவராஜாவாக்கி தக்கிண தேசத்தினை நிர்வகிக்க நியமித்தான். தானதர்மங்கள் ஆற்றிய படியால் அவன் தன் திஸ்சாரா என அழைக்கப்பட்டான்.

உருகுணையின் அரசனாக விளங்கிய மகிந்தன் iV படையுடன் இராஜரட்டைக்கு (சூளவம்சத்தில் இராஜரட்டை என்ற பெயர் முதன்முதலாக இவ்விடத்தில் வருகிறது) இராச்சியத்தைக் காசியப்பனிடம் இருந்து கைப்பற்ற முன்னேறினான். அனுராதபுரத்தின் ஆட்சியைக் கைப்பற்ற பல குறுநிலத் தலைவர்கள் முயல்வதான தகவல் வெளிவந்திருந்தது. கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருந்த தலைவர்களைச் சிரச்சேதம் செய்வித்தான். மன்னன் அனுப்பிய படையும் மகிந்தனால் துவம்சம் செய்யப்பட்டது. மகிந்தனுடைய தந்தையான யுவராஜா காசியப்பன் மூலம் அவனைத் திரும்பிச் செல்[illegible] அத்தோடு [illegible] மகிந்தனை ஆறுதல்படுத்தி மன்னன் முன் வரச் செய்தனர். அரசன் அவனைச் சாந்தப்படுத்தி தனது மகளையும் அவனுக்குத் திருமணம்செய்து உருகுணைக்குத் திருப்பி அனுப்பி வைத்தான். அதன்பின் புதிய விகாரைகள் புனருத்தாரணம், சேத்தியங்கள், விகாரைகளுக்கான கிராம தானங்கள் என்பன மன்னனால் நிறைவேற்றப்பட்டன. சேனாதிபதியான இலங்கா சேனன் என்பவன் அரச உரித்துடையவன். தூபராமசேத்தியத்திற்குப் பின்புறமாக தேரவாத பிக்குகளுக்கு ஒரு வீடமைத்துக் கொடுத் தான். அபய கிரிப் பிரிவினருக்கு தர்மராமக் கட்டடத்தையும், கேந்திரவினப் பிரிவினருக்கு காசியப்பசேன என்ற கட்டடத்தையும் அமைத்துக் கொடுத்தான். சேத்தியபர்வத் தில் ஹடயுன்கா விகாரை யை அமைத்து தர்மாருசிகப் பிரிவினருக்கு வழங்கினான். மகா விகாரைக்கு சமுத்தாகிரி எனப்படும் அழகான பிரிவேனா ஒன்றினைக் கட்டிக் கொடுத்தான். ராக்கன் என்ற படைத் தலைவனும் சேனன் என்ற படைத் தலைவனும் பௌத்த விகாரைகளைப் புதுப்பித்தும் புதியதாக அமைத்தும் வழங்கியுள்ளான். அரசனின் அமைச்சனான சோழராஜா என்பவன் பிரிவேனா ஒன்றினை மீள் அமைத்துக்கொடுத்துள்ளான்.

பதினேழு ஆண்டு ஆட்சியின் பின்னர் அரசன் காசியப்பன் மரணமடைந்தான். அதன் பின்னர் யுவராஜா காசியப்பன் மன்னனாக அரியணை ஏறினான். தப்புலன் என்பவனை ஆதிபாதாவாக, யுவராஜாவாக நியமித்தான். மன்னனுக்கு ஒரேயொரு மகன் இருந்தான். துட்டகாமினியால் கட்டப்பட்டு சிதிலமடைந்திருந்த மிரிசுவெட்டி விகாரையைப் புதுப்பித்தான். தன்னிடமிருந்த தங்க ஓலைகளில் எழுதப்பட்ட அஹிதர் மாபித்திகா என்ற தூபிக்கு பிரமாண்டமான ஒரு கோயிலமைத்து அங்கு வைத்தான். அதனைப் பாதுகாக்கும் பொறுப்பிற்கு "சக்க சேனாதிபதி" என்ற பதவியைத் தன் மகனுக்கு வழங்கினான். காசியப்பனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவர் பட்டத்து மகஷிதிஸாவிற்கு சக்கசேனாதிபதி மகனாகவும் இரண்டாவது மனைவி ராஜினி என்பவளுக்கு சித்தார்த் தன் மகனாகவும் விளங்கினர். சித்தார்த்தனை மன்னன் மலையராஜா வாக நியமித்தான். அவன் இறந்தபோது மன்னன் அவனுக்கென ஒரு மண்டபம் அமைத்து அன்னதானம் நடைபெற ஒழுங்கு செய்தான்.



இக்காலப்பகுதியில் பாண்டிய மன்னன் [illegible] சோழமன்னனின் (பாரந் தகன்) படையெடுப்புக்கு உட்பட்டான். அதனால் இலங்கை மன்னனிடம் இராணுவ உதவிவேண்டித் தூதனுப்பினான். மன்னனும் பெரும் சைனியம் ஒன்றினை மகன் சங்கசேனாதிபதி தலைமையில் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான். மகாதீர்த்தத் துறையிலிருந்து இலங்கை வீரர்கள் இந்தியக் கரையில் இறங்கினர். பாண்டிய மன்னன் பெருமகிழ்ச்சியோடு 'இப்படையின் உதவியுடன் ஜம்புத்தீபம் (இந்தியா) முழுவதையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வருவேன்' என ஆர்ப்பரித்து சோழப் படையோடு மோதினான். சோழப் படையை வெற்றிகாண முடியாது பின்வாங்க நேரிட்டது. சக்கசேனாதிபதி மீண்டும் ஒருதடவை முயன்று தோல்வி கண்டான். அங்கு பரவிய "பிளேக்" நோய்க்கு பாண்டிய மன்னனும், சக்கசேனாதிபதியும் படையினரின் பெரும்பகுதியினரும் இரையாக நேர்ந்தது. இலங்கை மன்னன் இதைக் கேள்விப்பட்டு வருந்தினான். தனது மகன் சக்கசேனாதிபதிக்கும் அவனது மனைவி வஜ்ராதேவிக்கும் பிறந்த புதல்வனை சக்கசேனாதிபதியாக்கி படைத் தலைமையை அவனிடம் ஒப்படைத்தான். பத்தாவது ஆட்சியாண்டில் அரசன் மரணமடைய நேர்ந்தது.



பண்டையகால இலங்கை அரண்மனை, கோயில் கதவின் கைபிடி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை கவிழ்த்து ஜே.வி.பி. ஆட்சியமைக்கும்

## சோமவன்ச சூளுரை

(கொழும்பு)

**நாடுகளில் அதிகாரம் கைமாறுவது தேர்தல்கள் மூலம் அல்ல. விரைவில் அரசாங்கத்தை பதவியில் இருந்து இறக்கி ஜே.வி.பி. ஆட்சியை கைப்பற்றும் என சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நாடுகளில் அதிகாரம் கைமாறுவது தேர்தல்கள் மூலம் அல்ல எனவும் ஜே.வி.பி. தேர்தலில் தோற்றாலும் விரைவில் அரசாங்கத்தை பதவியில் இருந்து இறக்கி விட்டு ஜே.வி.பி. ஆட்சியை ஏற்படுத்த போவதாக அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் இல்லாமல் அரசாங்கத்தை கவிழ்க்கும் விதம் தொடர்பில் உலக நாடுகளிடம் இருந்து சிறந்த உதாரணங்கள் கிடைத்துள்ளன. எகிப்தில் 80 முதல் 85 வீத வாக்குகளைப் பெற்ற முபாரக்கை இப்படியான முறையிலேயே விரட்டியடித்தனர் எனவும் நீண்டநாள் செல்லும் முன்னர் இலங்கையிலும் இவ்வாறான புரட்சியே ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என அனைத்து மக்களும் வீதியில் இறங்கி போராடி எதிர்க்கட்சியை உருவாக்கி முபாரக்கை பதவியில் இருந்து தூக்கினர். இலங்கையிலும் இவ்வாறான சக்தி உருவாகி வருகிறது.

இப்படியான சந்தர்ப்பம் ஏற்படும் போது அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றோம் என்பது போன்று கூறுவதில் பிரயோசனம் ஏற்படப் போவதில்லை.

இந்த வெற்றி சில நாட்களுக்குக் கூட செல்லுபடியற்றது. எதிர்ப்பு வரும் விதத்தை பார்த்து கொண்டிருங்கள் பொது எதிர்க்கட்சி உருவாக்கப்படுவதில்லை ஜே.வி.பி. பங்கெடுக்காது. சரத் பொன்சேகாவுக்கும் ஜே.வி.பிக்கும் புரிந்துணர்வு இல்லை. அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சிக்கு வரப்போவது ஜே.வி.பிதான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


## மணல் அகழ்வு; 23 பேர் கைது

(கொழும்பு)

மாங்குளம் பனிக்குளம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 23 பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்த எட்டு கியூப் மணல் மற்றும் 11 உழவு இயந்திரங்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)



சர்வதேச இந்துமத குருபீடம் ஆன்மீக பெருவிழாவை முன்னிட்டு ஆன்மீக சமய அறிவுப்போட்டியினை நடத்தியது. இப்போட்டியில் மேற்பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை சேர்ந்த பாஸ்கரி நித்தியானந்தன் முதலாமிடத்தை பெற்று தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டார். இவர் ஸ்ரீ ஐயப்பதாஸக்குருக்கள், திரைப்பட நடிகர் சரத்பாபு, ஐ.டி.எம். குழுமம் வி.ஜனகன் ஆகியோரிடமிருந்து பரிசினை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் விரைவில் முன்வைக்கும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் விரைவில் அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த இறுதித் தீர்மானத்தை அரசா ங்கம் விரைவில் எடுக்கும். 13 ஆம் திருத்தச் சட்டத்தை அடிப்படையாக கொண்டு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

1987 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும். கிழக்கில் தேர்தல் நடத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கில் விரைவில் தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் விரைவில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் காத்திர மான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர்களின் பிழையான வழிகாட்டல்களினாலேயே தமிழ் மக்கள் பெரும் துயரங்களை எதிர்நோக்க நேரிட்டது. எவ்வாறெனினும் மிக நெருக்கடியான யுத்த காலப்பகுதியில் வடக்கு மக்களை ஒடுக்காது அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

தமது கட்சி உறுப்பினர்கள் சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை பயன்படுத்தவில்லை. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து அரசியலில் ஈடுபட்டு வருகிறது என்றார். (அ-2)

# நீதிமன்ற சுயாதீனத்திற்கு பாதிப்பு; நடவடிக்கை எடுக்க தீர்மானம்

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்ற சுயாதீனத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ள அழுத்தங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் விரிவாக கந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

ஒரு சில ஆணைக்குழுவிற்கு பிரயோகிக்கப்படும் அரசியல் அழுத்தங்கள், மன்னார் நீதவானுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டமை, திவிநெகும சட்டமூலம் தொடர்பில் நீதிபதிகள் விமர்சிக்கப்பட்டமை தொடர்பாக நேற்று முன்தினம் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி சஞ்ஜய கமகே குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு 10 சிரேஷ்ட சட்டத்தரணிகளை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானங்கள் தொடர்பில் அடுத்த வாரத்திற்குள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# திருமலைக்கு சிங்கள அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலைக்கு பெரும்பான்மை இனத்தை சேர்ந்த அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென தெஹியோவிட்ட பியதிஸ்ஸ தேரர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கான அமைச்சர் தெரிவின் போது திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டு விட்டது. இரண்டு அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டு விட்டதாக தெரியவருகிறது. எஞ்சியுள்ள இரண்டு அமைச்சர் பதவிகளில் ஒன்றை திருகோணமலை மாவட்ட சிங்கள பிரதிநிதி ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.

கடந்த தேர்தலின் போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கே அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் விருப்பு வாக்கு அடிப்படையில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டவருக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட ஆரியவத்தி கலப்பத்திக்கு எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லை. எனவே, ஆரியவத்திக்கு அமைச்சுப்பதவி வழங்குவது மிகவும் பொருத்தமானது என தெஹியோவிட்ட பியதிஸ்ஸ தேரர் கோரியுள்ளார். (அ-2)

# பல்கலைக்கழக மாணவர்களின் பாதிப்புகள் குறித்து விசாரணை

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் சுமார் 78 நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரைகளின் பயன்கள்

### அகத்திக்கீரை

இதன் தாவரவியல் பெயர் Sesbania grandiflora என்பதாகும். இரத்த கொதிப்பை கட்டுப்படுத்தும், பித்தத்தை போக்கும்.

இளந்தாய்மார்கள் அகத்தி கீரையை அடிக்கடி சாப்பிட்டால் நிறைய பால் சுரக்கும். கண் எரிச்சல், கண் வலி, கண்ணில் நீர்



வடிதல் ஆகிய நோய்களுக்கு அகத்திப் பூவை கண்ணில் வைத்து கட்டிக்கொண்டால் சரியாகும்.

அகத்தி பட்டையை தண்ணீரில் காய்ச்சி வடித்துக் குடிநீராக குடிக்கலாம் அகத்தி கீரையை அடிக்கடி சேர்த்து கொண்டால் எலும்பும் பல்லும் உறுதியாகும். இந்த கீரையின் சாற்றில் 2 சொட்டு எடுத்து நமது மூக்கில் விட்டால் ஜுரம் போய்விடும். வாய்ப் புண், குடல்புண், தொண்டைப்புண் ஆகிய வற்றை இது நீக்கும்.

### பொன்னாங்கண்ணி கீரை

இக்கீரையின் சாறு எடுத்து நல்லெண்ணையுடன் சேர்ந்து தைலம் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்து வர கண் எரிச்சல், உடல் உஷ்ணம் போன்றவைகள் நீங்கி உடல் குளிர்ச்சி பெறும்.

பொன்னாங்கண்ணி கீரையுடன் பாசிப் பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு, மிளகுத்தூள் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் அசுத்த இரத்தம் சுத்தமாகும். உடலுக்கு புத்துணர்ச்சியைத் தரும்.

வெயிலில் வேலை செய்பவர்களுக்கும் கணனியில் அதிக நேரம் வேலை செய்பவர்களுக்கும் கண்களில் எரிச்சல் மற்றும் கண் சிவப்பாக காட்சி தரும். பொன்னாங்கண்ணிக் கீரையை பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

மூலநோய்க்கு அறுவை சிகிச்சை தேவையில்லை. பொன்னாங்கண்ணி கீரையுடன் பூண்டு, வெங்காயம் சேர்த்து வதக்கி அதனுடன் சீரகம் சிறிது சேர்த்து சாப்பிட்டு வந்தால் மூலநோய் படிப்படியாக குணமாகும். அப்போது புளி, காரத்தை தவிர்ப்பது நல்லது.

கூந்தல் வளர தினமும் பொன்னாங்கண்ணி தைலம் சிறந்தது.


### தயாரிக்கும் முறை:-

பொன்னாங்கண்ணி இலையை நிழலில் உலர்த்தி காய வைத்தது- 20 கிராம், அறுகம்புல் காய்ந்தது- 10 கிராம், செம்பருத்தி பூ காய்ந்தது- 10 கிராம் எடுத்து 1/2 லீற்றர் தேங்காய் எண்ணெயில் நன்கு காய்ச்சி போத்தலில் அடைத்து தினமும் உபயோகிக்கலாம்.

# உணவு உட்கொண்டபின் குளிர்பானம் அருந்தாதீர்!

உணவு உட்கொண்ட உடன் குளிர் தண்ணீரோ குளிர்பானமோ குடிப்பவர்களுக்கு இதய பாதிப்பு ஏற்படும் ஆபத்து அதிகம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

இதற்குக் காரணம் உண்ட உணவில் உள்ள எண்ணெய், கொழுப்புக்களை இரத்த நாளங்களில் படியச் செய்வதே என்கின்றனர் ஆய்வாளர்கள்.



நம் நாட்டைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு பெரும்பாலும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்த குளிர் தண்ணீரை அருந்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர். கிராமமோ நகரமோ இன்றைக்கு குளிர்ந்த நீர்தான். கோடை காலம் என்றாலே காலை உணவில் தொடங்கி இரவு உணவு வரைக்கும் நம் நாட்டவர்கள் உபயோகிப்பது குளிர் தண்ணீர்தான். இவ்வாறு குளிர்ந்த நீர் அருந்துவது ஆபத்தானது என்பதுடன் இது இதயத்தை பாதிக்கிறது. புற்றுநோய் க்கும் வழி வகுக்கின்றது என்கின்றனர் மருத்துவர்கள்.


உணவு உண்டவுடன் குளிர்ச்சியான தண்ணீரை குடித்தால் அது நாம் சாப்பிட்ட உணவில் உள்ள எண்ணெய்த் துகள்களை கெட்டியாக்கி விடுகிறது. இதனால் சாப்பிட்ட உணவு ஜீரணம் ஆவதில் சிக்கல் ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி உடலில் இருக்கும் கொழுப்பின் அளவு அதிகரிக்கவும் அது காரணமாகி விடுகிறது. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இதயம், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினை கள் வரலாம் என்றும் மரு த்துவர்கள் எச்சரிக்கின்றனர். மாரடைப்பு நோய் உள்ளிட்ட இதய நோய்க்கு ஆளானவர்கள் சாப்பிடும்போது குளிர்ந்ததண்ணீரை தொடவே கூடாது என்றும் அவர்கள் அறி வுறுத்துகிறார்கள். குளிர் தண்ணீர் குடிப்பதனால் வேறு பல தீமைகளும் ஏற்படும் என்றும் அவர்கள் பட்டியலிட்டுள்ளனர். நெஞ்சௌிச்சல், உயர் இரத்த அழுத்தம், சரும பாதிப்பு, பக்கவாதம், வயிற்று வலி, மைக்ரேன் தலைவலி, மூளை உறைவு நோய், பற்கள் பாதிப்பு போன்றவையும் ஏற்படுகின்றன.

எனவே, குளிர் தண்ணீர் அருந்துவதை தவிர்த்து விடுங்கள். அதற்கு பதிலாக வெதுவெதுப்பான நீர் அருந்துங்கள் என்று அறிவுறுத்தியுள்ளனர் மருத்துவர்கள். காய்கறிகளையும் பழங்களையும் உணவில் சேர்த்துக்கொள்வதுடன் உணவு உண்ட உடன் வெதுவெதுப்பான வெந்நீர் உட்கொள்வதும் கிரீன் டீ அருந்துவதும் எமது ஆரோக்கியத்திற்கு சிறந்ததாகும்.

# உடல் இளைக்க வேண்டுமாயின்
# தினமும் அறுகம்புல் சாறு குடியுங்கள்

தினமும் காலையில் வெறும் வயிற்றில் அறுகம்புல் சாறு குடிக்க வேண்டும். இதை கொஞ்சம் கொஞ்சமாக சுவைத்துக் குடிக்க வேண்டும். குடித்த 2 மணி நேரத்திற்குப் பின்னர் ஏனைய உணவு வகைகள் சாப்பிடலாம்.

### அறுகம்புல் சாறு குடிப்பதனால் ஏற்படும் பயன்கள்:-



- ❖ நாம் எப்பொழுதும் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கலாம்.
- ❖ இரத்தச் சோகை நீங்கி இரத்தம் அதிகரிக்கும்.
- ❖ வயிற்றுப் புண் குணமாகும்.
- ❖ இரத்த அழுத்தம் (பீ.பி) குணமாகும்.
- ❖ நீரிழிவு நோயாளிகளுக்கு சீனி அளவை கட்டுப்படுத்தும்.
- ❖ சளி, சைனஸ், ஆஸ்துமா போன்ற நோய்களை குணப்படுத்தும்.
- ❖ நரம்புத் தளர்ச்சி, தோல் வியாதி ஆகியவை நீங்கும்.
- ❖ மலச்சிக்கல் நீங்கும்.
- ❖ புற்று நோய்க்கு நல்ல மருந்து.
- ❖ உடல் இளைக்க உதவும்.
- ❖ இரவில் நல்ல தூக்கம் வரும்.
- ❖ பல், ஈறு கோளாறுகள் நீங்கும்.
- ❖ மூட்டு வலி நீங்கும்.
- ❖ கர்ப்பப்பை கோளாறுகள் நீங்கும்.
- ❖ நம் உடம்பை தினமும் மசாஜ் செய்தது போலிருக்கும்.

அறுகம்புல் இயற்கை நமக்களித்த மிகச் சிறந்த மருந்தாகும். இது எளிதில் அனைவருக்கும் கிடைக்கக்கூடியது. பல நோய்களை கட்டுப்படுத்தும் ஆற்றல் இதற்குள்ளது. அறுகம்புல் சாறு எடுத்து உட்கொண்டால் உடலில் ஏற்படும் பல வியாதிகளுக்கு விடை கொடுக்கலாம். கிராமப்புறங்களில் வயல் வெளிகளில் அறுகம்புல் எளிதாகக் கிடைக்கின்றது. இதைப் பறித்து தண்ணீரில் நன்கு அலசி தூய்மைப்படுத்திய பின் தண்ணீரைச் சேர்த்து நன்கு இடித்து சாறு எடுத்து அருந்தலாம்.

தேவைப்பட்டால் அறுகம்புல்லுடன் துளசி, வில்வம் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். மிக்ஸியைப் பயன்படுத்தியும் சாறு எடுக்கலாம். அறுகம்புல் சாற்றினை காலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள வேண்டும். மாலை வேளைகளிலும் 200 மி.லீ. அளவுக்கு பருகலாம்.

சித்த வைத்தியத்தில் மிகவும் சிறப்பாக்க் கூறப்படும் ஒரு தாவரம் அறுகம்புல்லாகும். இதன் ஆங்கில பெயர் Cynon doctylon ஆகும். அறுகம்புல் நீரிழிவு நோயாளிகளுக்கும் சிறந்த மருந்து. உடல் வெப்பத்தை அகற்றும், சிறுநீர் பெருக்கும், குடல் புண்களை ஆற்றும், இரத்தத்தை தூய்மையாக்கும், உடலை பலப்படுத்தும், கண் பார்வை தெளிவுபெறும். உடல் இளைக்க வேண்டுமா? அப்படியானால் தினமும் அறுகம்புல் குடியுங்கள் என்கிறது இயற்கை மருத்துவம்.

சுத்தம் செய்யப்பட்ட அறுகம்புல் சாற்றை காலை எழுந்தவுடன் குடித்து வந்தால் உடலிலுள்ள கெட்ட நீர் வெளியேறி தேவையற்ற சதைப்பகுதி குறைந்து விடுமாம். இரத்தத்தை சுத்தப்படுத்தும் சக்தியும் அறுகம்புல்லுக்கு இருக்கின்றது.


ஞாபக சக்தியைத் தூண்ட அறுகம்புல் சிறந்த மருந்தாகும். ஞாபக மறதியைப் போக்கி அன்றாட வாழ்வில் மன உளைச்சல், மன இறுக்கம் நீங்கும், அறுகம்புல்லை நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் கசாயம் செய்து குடித்து வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும்.

அறுகம்புல்லையும் தேங்காய் எண்ணையும் சம அளவு எடுத்துக் கொண்டு அதை உடலில் தேய்த்து அரை மணி நேரம் ஊறவிடவும். பின்னர் கடலை மாவால் தேய்த்துக் குளித்தால் உடல் கண்ணாடி போல் ஜொலிக்கும்.




# வெற்றிலையின் மகிமை

வெற்றிலை போடுவது நல்லதல்ல என பல் டாக்டர்கள் கூறுவர். வெற்றிலை என்பது தனிப்பட்ட முறையில் கெடுதல் அல்ல. அதனுடன் சேர்க்கப்படும் பாக்கும் சுண்ணாம்புமே கெடுதலைத் தருகின்றன. வெற்




றியிலையில் உள்ள செவிகால் என்கிற வேதிப்பொருள் இயற்கையான அன்ரிசெப்றிக் ஆகும். வெற்றிலை செல் சிதைவைத் தடுக்கிறது என ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கல்சியம் மாத்திரைகளை விட பால், தயிர், நல்லெண்ணெய் வெற்றிலையில் இருந்து கல்சியத்தை உடல் எளிதாக ஏற்றுக் கொள்கிறது. வயதான பெண்களுக்கு இரத்தத்தில் ஏற்படும் இழப்பை சரி செய்ய எலும்பில் இருந்து கல்சியத்தை உடல் எடுக்கிறது. இதனால் எலும்புகள் பலவீனமடையும்.

இந்தகுறையை நிவர்த்தி செய்ய வெற்றிலையைப் பரிந்துரை செய்கின்றனர். வெற்றிலையில் உள்ள யூஜினால் என்னும் வேதிப்பொருள் புற்றுநோயைக் குணப்படுத்தும் இயல்பைப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஊடக சுதந்திரம்..?



## ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வாழும் அவலம்...!

அண்மைக்காலம்வரை இலங்கையிலுள்ள சிறுபான்மைத் தமிழ் சமூகத்தவர்கள் அகதித் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக சிங்க ஊடகவியலாளர்கள் மற்றும் சிங்கள செயற்பாட்டாளர்கள் போன்றோர், இலங்கையைவிட்டு புலம்பெயர்வது அதிகரித்து வருகின்றது. தமிழத் தேசிய வாதத்தை அழிப்பதற்கான கருவியாக, இலங்கை அரசாங்கமானது இராணுவத் தீர்வை பயன்படுத்தியதை எதிர்க்கின்ற, பாரிஸில் நிர்க்கதியாகியுள்ள இலங்கை ஊடகவியலாளர்கள் போன்ற பல தாராளவாத, மிதவாத மனப்பாங்கைக் கொண்ட செயற்பாட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஆதரித்திருந்தால், அவர்கள் தமது சொந்நாட்டில் சொகுசு வாழ்வை வாழ்ந்திருக்க முடியும். இதற்குப் பதிலாக அவர்கள் பிறிதொரு சமூகத்திற்காக குரல் கொடுத்ததால் இன்று தமது நியாயத்தை நிலை நாட்டுவதற்காக, தம்மை அர்ப்பணித்து, இதற்காக மிகப்பாரிய விலையை வழங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு நியாயத்தை தட்டிக்கேட்ட இலங்கையர்கள், பலர் தமது சொந்தக் குடும்ப உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்ட பல சம்பவங்களும் நடந்துள்ளன.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்றுள்ள தமிழ் ஊடக வியலாளர்களும் இவ்வாறான கடினங்களை எதிர்நோக்குகின்ற போதிலும் இவர்களை ஆதரிப்பதற்கு குறைந்தது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளாவது உள்ளனர். ஆனால், இலங்கையை விட்டுத் தப்பிச் செல்லும் சிங்கள ஊடக வியலாளர்களை தாங்குவதற்கு வெளிநாடுகளில் எந்தவொரு சமூகத்தவரும் இல்லையென்பதே உண்மையாகும்.

உளவியல் ரீதியாக நோக்கினால் தமது சொந்த நாட்டைவிட்டு தப்பிச் செல்லும் தமிழ் ஊடக வியலாளர்களுக்கும் சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் இடையில் வேறுபாடு உண்டு. தமிழர்கள் தமக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளுக்காக குரல்கொடுக்கையில் வெளியேற வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். சிங்கள ஊடக வியலாளர்கள், தமிழ்ச் சமுதாயத்தின் மீதுள்ள நியாயப்பாட்டுக்காக குரல் கொடுக்கையில் வெளியேறும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

2009 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட யுத்த நடவடிக்கையின் போது, இலங்கைப்படைகளால் மேற் கொள்ளப்பட்ட யுத்தமீறல்களுக்கு உரிய பதிலளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இவ்வாண்டு ஆரம்பத்தில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையானது இலங்கைக்கு எதிராக அழுத்தத்தை பிரயோகித்ததுடன் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியிருந்தது. இதன்போது இலங்கைக்கு எதிராக செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட, லண்டனில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கையைச் சேர்ந்த சிங்கள ஊடக வியலாளர் ஒருவர் இலங்கைத் தொலைக்காட்சியில் தேசத் துரோகியென பட்டம் சூட்டப்பட்டார்.

இலங்கையில் நான் சந்தித்த பல ஒளிப்படக் கலைஞர்களும் ஊடக ஆசிரியர்களும் கடந்த மூன்று ஆண்டுகளாக ஐரோப்பாவிலுள்ள பண்ணைகளில் பழம் பறித்தல், தொழிற்சாலைகளில் கழிவுகளை அகற்றுதல், சுத்தம் செய்தல், தோட்டங்களில் பணிபுரிதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் தமது வாழ்வில் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்ற போதும், அந்நிய தேசத்தவர்களின் இரக்கத்தையும் அன்பையும் பரிசுகளையும் பெறுகின்றனர். அவுஸ்திரேலிய பண்ணையொன்றில், பணிபுரியும் சிங்கள ஒளிப்படக்கலைஞர் ஒருவரின் வரலாற்றை அறிந்து கொண்ட அவரது முதலாளி, தனது பிறந்தநாள் பரிசாக புதிய ஒளிப்படக்கருவியொன்றை வழங்கியிருந்தார். இதேபோன்று நோர்வேயிலுள்ள நூலகம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர்கள் ஒன்று சேர்ந்து இலங்கையில் இடம்பெற்ற மிகக் கொடூரமான, இறுதிக்கட்ட யுத்தத்தில் தனது எல்லா உடமைகளையும் இழந்து தற்போது நோர்வேயில் வாழும் தமிழ் ஒளிப்படக் கலைஞருக்கு ஒளிப்படக் கருவி ஒன்றை வழங்கினர்.

முன்பு குறிப்பிட்ட, பாரிஸில் உள்ள இலங்கை ஊடக வியலாளர்களுக்கு நேபாளி ஒருவர், தனது சிறிய வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுத்திருந்தார். இதன் பின்னர் தமிழ் ஊடகவியலாளர்கள் இணைந்து குறித்த சிங்கள ஊடக வியலாளருக்கு பாரிஸில் தற்காலிகமாக தங்குவதற்கான இடத்தை ஏற்பாடு செய்து கொடுத்தனர். இது அசாதாரணமான சம்பவமாகும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் ஊடகவியலாளர்கள் சிலர் தற்போதும் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு தம்மாலான உதவிகளை வழங்கி வருகின்றனர். குறிப்பாக இவர்கள் தங்குவதற்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் தமிழ் ஊடக வியலாளர்கள் சிலர் ஈடுபடுகின்றனர்.

இலங்கையில் மீளிணக்கப்பாடு என்பது பெருமளவில் பேசப்படுகின்றபோதிலும் செயலளவில் இது மிகக் குறைவானதாகும்.

பல பத்தாண்டுகளாக ஏற்பட்ட கசப்புணர்வையும் இரத்தம் சிந்தியதையும் வெல்வதென்பது, அவ்வளவு சுலபமான காரியமல்ல.

இலங்கையைவிட்டு வெளியேறி புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மற்றும் சிங்க ஊடகவியலாளர்கள் தமக்கிடையே உதவிகளைப் பரிமாறிக்கொள்வதுடன் பொதுவான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் யுத்தவலயத்தில் வாழ்ந்த தமிழ் ஒளிப்படக் கலைஞரான ஒருவர் நோர்வேயில் அரசியல் தஞ்சம் புகுவதற்கு சிங்கள ஊடகவியலாளர் ஒருவரே உதவி புரிந்துள்ளார். அதாவது ஸ்கைப் மூலம் சிங்கள ஊடக வியலாளருடன் தொடர்பை ஏற்படுத்திய அவர், இலங்கையிலிருந்து தப்பிச் செல்வதற்கு தேவையான ஆவணங்களை தயாரிப்பதில் இவரது (சிங்களவர்) உதவியைப் பெற்றுக்கொண்டார்.

யுத்தவலயத்தில் வாழ்ந்த தமிழ் ஊடகர் சிங்கள ஊடக வியலாளர் ஒருவரை தனது நண்பராகக் கொண்டிருப்பது இதுவே முதற்தடவையாகும். தற்போது இவர்கள் இருவரும் இணைபிரியா நண்பர்களாயுள்ளனர்.

பிரித்தானியாவிலுள்ள எனது சிங்கள ஊடகவியலாளரான நண்பரொருவர் தமிழ் ஊடகவியலாளர் ஒருவரை சந்திக்க ஏற்பாடு செய்தார். இத்தமிழ் ஊடகவியலாளர்கள் இலங்கையில் பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்ததை நான் அவரது உடலில் காணப்படும் வடுக்கள் மூலம் அறிந்துகொண்டேன். இத்தமிழ் ஊடகவியலாளரின் முழங்கால் சில்லுகள் தாக்கப்பட்டிருந்தன.

அகதிகள் தஞ்சம் கோரி பிரித்தானிய விடுதியொன்றில் தங்கியிருக்கும் ஒவ்வொருவரும் குறித்த தமிழ் ஊடகவியலாளர் வேதனை தாழாது வாய்விட்டுக் கத்தும் சத்தம் கேட்டு இரவில் திடுக்கிட்டு விழிக் கின்றனர். எனது சிங்கள நண்பர் இத்தமிழ் ஊடக வியலாளருக்கு துணையாக உள்ளதுடன் ஒவ்வொரு நாள் காலையிலும் கையெழுத்திடுவதற்காக இவரை அழைத்துச்சென்று வருகின்றார். இவர், இலங்கை அரசாங்கத்தால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதன் பின்னர். கடந்த நான்கு மாதங்களின் முன் பிரித்தானியா வந்தடைந்திருந்தார்.

இவரின் உடல் முழுவதும் கத்தியால் வெட்டப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன. இவரது வலது கை நிரந்தரமாக செயலற்றுவிட்டது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்திருக்கலாம் ஆனால், ஊடகவியலாளர்களைப் பொறுத்த அளவில் இலங்கை பாதுகாப்பற்ற இடமாகவே

இவ்வாறு ஊடகவியலாளர் ஃபிரான்ஸிஸ் ஹரிசன் அண்மையில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார். சிறிலங்காவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் குடும்பமாக பிரான்ஸ் வந்து சேர்ந்துள்ளார்.

இவ் ஊடகவியலாளர் சிறிலங்காவின் பெரும்பான்மை சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் என்பது முதலில் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

சிறிலங்காத் தீவில் பல பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட யுத்தமானது 2009ல் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதுடன், இதில் சிங்களவர்கள் வெற்றி பெற்றுக் கொண்டனர் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். ஆனால், இந்நிலையில் வெற்றிபெற்ற பெரும்பான்மை சிங்கள இனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர், தனது சொந்நாட்டில் வாழ முடியாது நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாவது மிகவும் ஆச்சரியத்தை தருகின்றது.

**மிக அண்மைக்காலம் வரை சிறிலங்காவிலுள்ள சிறுபான்மை தமிழ் சமூகத்தவர் அகதித் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக சிங்கள ஊடகவியலாளர்கள் உட்பட மற்றும் சிங்கள செயற்பாட்டாளர்கள் போன்றோரும் சிறிலங்காவை விட்டு புலம்பெயர்வது அதிகரித்து வருகின்றது-ஊடகவியலாளர் ஃபிரான்ஸிஸ் ஹரிசன்**

நன்றி:இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் அநியாயத்திற்கு மத்தியில் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் இணையுமா?

## ஐ.ம.முன்னணியின் பொதுச் செயலாளர் கேள்வி

(கொழும்பு)

**வடபகுதியில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை பலாத்காரமாக பறித்து அரசியல் கைதிகள் சித்திரவதைக்குள்ளாகிவரும் நிலையில் அரசாங்கத்தின் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி ந.குமரகுருபரன் கேள்வி எழுப்பினார். அத்துடன் தமிழ் மக்களின் அஹிம்சைப் போராட்டத்தை அடக்கும் அரசு தீர்வை வழங்குமா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது எதிரணி கூட்டமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடபகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற முடியவில்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இராணுவம் பலாத்காரமாக பறித்தெடுக்கிறது. இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் உரிய முறையில் மீள்குடியேற்றப்படவில்லை. பெரும்பாலான மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி காட்டுப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்பட்டு இருவர் கொலை செய்யப்பட்டனர். தாக்கப்பட்ட கைதி கோமா நிலைய்யில் சிறைச்சாலை வைத்தியசாலைகளில் சித்திரவதைக்குள்ளாகுகின்றனர். இக்கைதிகளுக்கு உணவு வழங்கப்படுவதில்லை, நீர் கலந்த பருப்பும் பாணும் சோயாவுமே வழங்கப்படுகின்றது. இவ்வாறு தமது பிள்ளைகள் தடுத்து வைத்திருப்பதை தாய்மார் நேரில் கண்டு வேதனையுடன் உள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். பல வருடங்களாக எதுவிதமான குற்றச்சாட்டுக்களும் இன்றி நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் கே.பி. உள்ளிட்டவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுக்கின்றது. இவ் அழைப்பை கூட்டமைப்பினரால் மனச்சாட்சியுடன் ஏற்றுக் கொள்ள முடியுமா என்றார்.

இதேவேளை கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன கருத்துரைக்கையில்,

உலகம் முழுவதும் வட பகுதி தமிழ் மக்களுக்கு சிவில் நிர்வாகம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது. ஆனால் அங்கு நேரில் சென்று பார்த்தால் உண்மையை புரிந்து கொள்ள முடியும்.

சிவில் நிர்வாகம் வடக்கில் இல்லை. முழுமையாக இராணுவமே நிர்வாகம் செய்கின்றது. அடிக்கு அடி இராணுவமே உள்ளது.

அண்மையில் கேப்பாப்புலவில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை இராணுவம் பலாத்காரமாக பறித்தெடுத்துள்ளது. அதனை மக்களுக்கு வழங்குமாறு வலியுறுத்தி நாம் ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

அவ்வாறானதோர் சூழ்நிலையில் எம்மீது கழிவு ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டது. கல்வீச்சு இடம்பெற்றது. இன்று வெள்ளை வான் கடத்தலுக்குப் பதிலாக கல்வீச்சும் கழிவு ஒயில் வீச்சும் மக்கள் மீது நடத்தப்படுகின்றது என்றும் கூறினார். (அ-2)

# ஆறுமுகநாவலர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றம் ஆறுமுகநாவலரின் நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

ஆண்டு 5 முதல் 8 வரை கீழ்ப்பிரிவாகவும் ஆண்டு 9 முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை மத்திய பிரிவாகவும் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பினரை மேற்பிரிவாகவும் மூன்று பிரிவுகளாக வகுத்து போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் **ஸ்ரீலஸ்ரீ நாவலரை என்றும் நினைந்து போற்றுவோம்** எனும் தலைப்பில் 150 சொற்களுக்கு குறையாமலும் 200 சொற்களுக்கு மேற்படாமலும் மத்திய பிரிவு மாணவர்கள் நாவலர் பெருமான் காட்டிய வழியில் வாழ்வோமாக என்ற தலைப்பில் 250 சொற்களுக்கு குறையாமலும் 300 சொற்களுக்கு மேற்படாமலும் மேற்பிரிவினர் நாவலர் பெருமான் ஏற்படுத்திய சமய மறுமலர்ச்சி எனும் தலைப்பில் 350 சொற்களுக்கு குறையாமலும் 500 சொற்களுக்கு மேற்படாமலும் கட்டுரைகளை எழுதி அனுப்ப வேண்டும்.

போட்டியாளர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும். கட்டுரைகள் பாடசாலை அதிபரின் அலுவலக முத்திரை பதித்து அத்தாட்சிப்படுத்தப்படுவதுடன் ஏற்கனவே பிரசுரமாகாதவையாகவும் இருத்தல் வேண்டும். கட்டுரைகள் ஏ4 தாளில் எழுதி அனுப்புதல் வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மூன்று பிரிவுகளுக்கும் முதற் பரிசாக மூன்றாயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக இரண்டாயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். கட்டுரைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம் இல.95/1, சேர் சிற்றம்பலம் எ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (அ)

# நேரடி அஞ்சல்

(இருபாலை)

வண்ணை அருள்மிகு வெங்கடேச பெருமாள் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை மதுரகவி காரை எம்.பி அருளானந்தம் தலைமையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் யாழ். எப்.எம் அலைவரிசையில் காலை 7 மணி முதல் 11 மணிவரை நேரடி அஞ்சல் ஒலிபரப்பு செய்யவுள்ளது. (அ-136)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் இன்று முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என தேவஸ்தான பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ)

# ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(சிவநகர்)

கடந்த ஆண்டு அறிமுகமான மகிந்த சிந்தனைத்திட்டத்தின் கீழ் 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அறிவிக்கப்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த ஜூன் மாதத்திலிருந்து நிலுவையுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவினால் பூநகரியில் வைத்து அக்கராயன் பிரதேசத்திற்குட்பட்ட 10 முதியவர்களுக்கு இக்கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டது.

ஏனையவர்களுக்கான கொடுப்பனவு அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வழங்கப்படவுள்ளது. கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 960 முதியவர்கள் இக்கொடுப்பனவிற்கு தகுதி பெற்றுள்ளனர். (அ-9-254)

# ஆன்மீக சொற்பொழிவு

(பூந்தோட்டம்)

வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீதேவி சமேத ஸ்ரீமகாவிஷ்ணு தேவஸ்தான முதலாவது பிரம்மோற்சவப் பெருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதையொட்டி ஆன்மீக சொற்பொழிவும் இடம்பெற்று வருகின்றது.

பத்து நாட்களை கொண்டமைந்த இத் திருவிழாவில் **ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தசாவதாரங்கள்** எனும் பொருள் பற்றி சொல்வேந்தன் எஸ்.எஸ். வாஸன் சிறப்புச் சொற்பொழிவாற்றி வருகின்றார். (அ-266)


HDFC
GOLD LOAN
பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
011 5737373
011 2356800
அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK
www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)
(சி/1149)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

230

## கோவர்த்தனன் கண்ணன்

புராதனக் காலத்தில் வட இந்தியாவில் யமுனை நதிக்கரையில் அழகான ஒரு சின்னஞ்சிறு கிராமம் இருந்தது.

அங்கே வாழ்ந்த மக்கள் பசுக்களை வளர்ப்பது, பயிர்த் தொழில் புரிவது ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தனர்.

பசுவையே தங்கள் செல்வமாகப் போற்றி வந்தனர். அங்கு பாலும் தயிரும் ஆறாகப் பெருகி ஓடின.


அக்கிராமமக்கள் தொன்று தொட்டு இந்திரனையே வழிபட்டு வந்தனர்.

இந்திரன்தான் பூமியில் மழை பெய்விக்கிறார். அவரால் தான் பூமி செழித்து தங்களுடைய பசுக்களுக்குத் தேவையான தீவனம் கிடைக்கிறது என்பது அவர்களின் நம்பிக்கை.

அதே கிராமத்தில் வசிக்கும் யசோதையின் மைந்தன்தான் கண்ணன்.

அவன் இந்திரனை வழிபடுவதால் பயன் யாதொன்றும் இல்லை. வெள்ளம், வறட்சி போன்றவற்றிலிருந்து நமது முயற்சியால் நம்மை நாமே காத்துக் கொள்ளமுடியும் என்று தனது நண்பர்களிடம் கூறுவது வழக்கம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர்.

இந்திர வழிபாட்டிற்காக எல்லா வீடுகளிலும் பலவகைப் பண்டங்கள் தயாரிப்பது வழக்கம். படைத்து வழிபாடு செய்வதற்கு முன்பாகவே அந்தப் பிள்ளைகள் உண்ணத் தொடங்கிவிடுவார்கள். பெற்றோர்கள் அச்சிறுவர்களிடம் நயமாகவும் அச்சுறுத்தியும் இப்படிச் செய்யாதீர்கள். அவ்வாறு செய்தால் இந்திரனுக்குக் கோபம் வந்துவிடும் என்று எவ்வளவோ



எடுத்துக் கூறுவார்கள்.

ஆனால் அவர்கள் கேட்பதேயில்லை. கண்ணனும் சிறுவர்களும் திருட்டுத்தனமாக பலகாரங்களை எடுத்து உண்டு விடுவர்.

ஒரு சமயம் அந்தக் கிராமத்தில் தொடர்ந்து அடைமழை பெய்தது. பல நாட்கள் சூரியனே தென்படவில்லை.

கிராமத்தைச் சுற்றி எங்கு பார்த்தாலும் ஒரே தண்ணீர். யமுனை நதியிலும் வெள்ளம் பெருகிவந்தது.

கிராமமே நீரில் மூழ்கிவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டது.

கிராமமக்கள் இந்தத் துன்பம் கண்ணனால்தான் வந்தது.

அவன்தான் இந்திர பகவானுக்கு கோபம் வரும்படி செய்துவிட்டான். வீடுகளுக்குள்ளே யெல்லாம் தண்ணீர் புகுந்து விட்டதே! நாம் எப்படி வசிப்பது? மாடு கன்றுகளை எங்கே கட்டுவது? என்று மிகவும் கவலையடைந்தனர்.

கண்ணன் தனது நண்பர்களை அவசரமாக அழைத்து நிலைமையை ஆராய்ந்தான்.

நமது கிராமத்தில் உள்ள குன்றுகளின் மேல் கிராம மக்கள் அனைவரையும் கொண்டு போய்விட வேண்டும். பொருட்கள், கால்நடைகளையும் அங்கே சேர்த்து



விடவேண்டும்.

அவ்வாறு செய்து கொண்டால் வெள்ளம் வரும் போது தப்பித்துக் கொள்ளலாம் என்று கூறினான்.

கண்ணனின் யோசனையை ஏற்றுக்கொண்ட இளைஞர்கள் மின்னல் வேகத்தில் செயலில் ஈடுபட்டனர். வீடுகளிலிருந்த பொருட்களையெல்லாம் கொண்டு போய் குன்றின் மேல் சேர்த்தார்கள்.

வீட்டுக்கூரைகளையும் தூக்கிச் சென்று குடில்களை அமைத்தார்கள்.

மாடு, கன்றுகள் மற்றும் தீவனங்களையும் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். பின்பு மக்களையும் பத்திரமாக அங்கே அழைத்துச் சென்றனர்.

வெள்ளம் வடியும் வரை அனைவரையும் அங்கே இருக்கும்படி கூறிவிட்டு அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

குன்று ஒரு புதிய கிராமம் உருவானது போல் காட்சியளித்தது. மக்கள் அனைவரும் அந்தக் குன்றுக்கு கோவர்த்தனம் என்று பெயரிட்டனர்.

சிலநாட்களில் வெள்ளம் வடிந்தது. மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி வசிக்கத் தொடங்கினர்.

அதற்கு வெகு நாட்களுக்குப் பின்னர் அங்கிருந்த பெரியோர், வெள்ளம் வந்த சமயத்தில் கண்ணபிரான் இருந்தான்.

மிகவும் சிரமப்பட்டு மக்களைக் காத்தான் என்று நினைவுகூர்ந்து போற்றிப் புகழ்ந்தனர். பின்னர் கண்ணன் செயல் நாடெங்கும் பரவியது.

மக்கள் கண்ணனுக்கு ***கோவர்த்தன கிரிதாரி*** என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் பாடப்புத்தகத்தில் இந்திய வீரர்களின் வரலாறு

(ஹைபா)

இஸ்ரேலின் ஹைபா நகர விடுதலைக்காக நடந்த போரில் உயிர் நீத்த இந்திய வீரர்களின் வரலாற்றை பாடப் புத்தகங்களில் இடம் பெற செய்ய நகர நிர்வாகம் திட்டமிட்டுள்ளது ஹைபா.

துருக்கி நாட்டு பிடியில் 402 ஆண்டுகளாக இருந்து வந்த இஸ்ரேலின் ஹைபா நகரம் கடந்த 1918 ஆம் ஆண்டில்முதல்உலகப்போரின் போது விடுவிக்கப்பட்டது. இந்த விடுதலைப் போரில் இந்திய இராணுவத்தினர் கூட்டுப் படையுடன் இணைந்து சண்டையிட்டு ஏராளமானோர் இறந்தனர்.

இந்திய இராணுவத்தினரின் தியாக வரலாறு குறித்து ஹைபா ஹிஸ்டாரிக்கல் சொசைட்டி என்ற அமைப்பு விரிவான ஆய்வு மேற்கொண்டது.

இதில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த குதிரைப்படை வீரர்கள் தங்கள் உயிரை தியாகம் செய்தது தெரிந்தது. எதிரிகளின் இயந்திர துப்பாக்கி தோட்டா முழக்கங்களுக்கு அஞ்சாமல் துணிச்சலாக முன்னேறிய இந்திய குதிரைப்படை வீரர்களின் தீர்மானம் குறித்தும் இஸ்ரேலின் பல்வேறு இடங்களில் 900 இற்கும் மேற்பட்ட இந்திய வீரர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டது குறித்தும் அந்த அமைப்பு விரிவான ஆவணங்களை தயாரித்தது.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் முதல் உலகப் போரின் நூற்றாண்டு நினைவு விழாவின் போது இந்திய வீரர்களின் அர்ப்பணிப்புக்கு சிறப்பு மரியாதை செய்ய ஹைபா நகராட்சி நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.

இந்திய அரசும் இணைந்து இந்த விழாவை சிறப்பாக நடத்தித் தர வேண்டும் என்றும் ஹைபா நகராட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய இராணுவத்தைச் சேர்ந்த குதிரைப் படைகளின் தியாக வரலாறு மற்றும் வீர தீரச் செயல்களை பாடசாலை மாணவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் வரலாற்றுப் பிரிவு பாடப் புத்தகங்களில் அவற்றை இணைக்கவும் ஹைபா நகராட்சி நிர்வாகம் முடிவெடுத்துள்ளதாக துணை மேயர் ஹெட்வா அல்மாக் கூறியுள்ளார். (அ-2)

# ஈரானை இஸ்ரேல் தாக்கினால் மூன்றாம் உலகப்போர் வெடிக்கும்

## ஈரான் எச்சரிக்கை

(டெக்ரான்)

ஈரானை இஸ்ரேல் தாக்கினால் மூன்றாம் உலகப் போர் வெடிக்கும் என்று அந்நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது. பொருளாதாரத்தடை விதித்து ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அமெரிக்காவுக்கோ அதன் ஆதரவு நாடுகளுக்கோ அச்சப்படாமல் ஈரான் தன்னுடைய செயற்பாடுகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இஸ்ரேல் தங்கள் நாட்டின் மீது போர் தொடுத்தால் நிச்சயம் மூன்றாம் உலகப் போர் வெடிக்கும். ஈரான் தனது அணு ஆயுதத்திட்டத்தை மேம்படுத்துவது இஸ்ரேலுக்கு கவலை அளிப்பதாக உள்ளது. அதனால் ஈரானில் உள்ள அணு உலைகளை அழித்து விடுவோம் என்று இஸ்ரேல் மிரட்டி வருகிறது.

ஆனால், ஈரானில் அணு ஆயுதத் திட்டம் நல்ல நோக்கங் களுடன் தான் செயற்படுத்தப்படுகிறது என ஈரான் கூறியுள்ளது.

இதற்கிடையில் ஈரானின் இஸ்லாமிக் ரெவொ லுஷன் கார்ட்ஸ் கார்ப்ஸின் கொமா ண்டர் மேஜர் ஜெனரல் முகமத்து அலி ஜபாரி கூறுகையில், ஈரான் மீது போர் தொடுப்பதுதான் ஒரே வழி என்று இஸ்ரேல் அதிகாரிகள் நினைக்கின்றனர். அவர்கள் மட்டும் போர் தொடுத்தால் அவர்களின் அழிவுக்கு அது வழி வகை செய்து விடும் என்றார். (அ-2)

# விமானம் தாங்கிக் கப்பலை இணைத்துக் கொண்டது சீனா




சீன இராணுவத்தில் முதல் முறையாக விமானம் தாங்கிக் கப்பல் இணைத் துக் கொள்ளப்பட் டது. சீன இராணுவம் உலகில் வலிமையான இராணுவமாக இருந்தாலும் இதுவரை சீனாவிடம் விமானம் தாங்கிக் கப்பல் இல்லாமல் இருந்தது. அமெரிக்காவுடன் போட்டி போடும் அளவுக்கு இராணுவத்தை வளர்த்து வரும் சீனா இப்போது முதன் முதலாக இராணுவத்தில் விமானம் தாங்கி கப்பலை சேர்த்துள்ளது. இந்தியக் கப்பல் ரஷ்யாவிற்கு சொந்தமானது.

2002 ஆம் ஆண்டு அந்தக் கப்பலை சீனா விலைக்கு வாங்கி புதுப்பித்துள்ளது. சீனாவில் உள்ள டேலியன் கப்பல் கட்டும் துறையில் பல ஆண்டுகளாக புதுப்பிப்பு பணி நடந்து முடிந்து இப்போது சீன கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. கப்பலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பணிக்காக பயன்படுத்த போவதாக சீனா கூறியுள்ளது. ஆனால், சீனா சமீபகாலமாக அயல் நாடுகளான ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்சுடன் கடற்நிலப்பரப்பு தொடர்பாக மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது.

எனவே, இந்த கடல் பகுதியில் கண்காணிப்பதற்காகவும் அந்த நாடுகளை அச்சுறுத்தும் வகையிலும் கப்பலை பயன்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக் கப்பல் 990 அடி நீளம் கொண்டதாகும். 36 விமானங்கள் 16, ஹெலிகொப்டர்களை இதில் நிறுத்தி வைக்கலாம். 3 ஆயிரம் வீரர்கள் கப்பலில் தங்கியிருக்கும் வசதி உள்ளது. ரஷ்யாவிடம் இந்த கப்பல் இருந்தபோது வர்யாக் என்று பெயரிடப்பட்டு இருந்தது. தற்போது சீனா இதற்கு ஷிலேங் என்று பெயரிட்டு உள்ளது. (அ-2)

# தாஜ்மஹாலை பாதுகாப்பதற்காக சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடு

(புதுடில்லி)



தாஜ்மஹாலை பாதுகாக்க சுற்றுலா பயணிகள் எண்ணிக்கைக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

உலக அதிசயங்களில் ஒன்றான இதை பார்க்க தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருவதால் அது வலுவிழந்து வருகிறது.

இதனால் தாஜ்மஹாலை பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது குறித்து அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மைய துணை தலைவர் கூறுகையில், சுற்றுலா பயணிகளை அழைத்துக் கொண்டு ஆக்ராவுக்குள் ஆயிரக்கணக்கான வாகனங்கள் வருகின்றன. இந்த வாகனங்கள் ஏற்படுத்தும் மாசு காரணமாக தாஜ்மஹால் பொலிவிழந்துள்ளது. இதனால் ஆக்ராவுக்குள் இயற்கை எரிவாயு பயன்படுத்தும் வாகனங்கள் மட்டுமே இயக்க அனுமதிக்க வேண்டும்.

தினமும் இவ்வளவு சுற்றுலா பயணிகளுக்குதான் அனுமதி என்ற கட்டுப்பாடு கொண்டுவர வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, தாஜ்மஹாலை நம் குழந்தைகளுக்காக பாதுகாக்க வேண்டும். இதற்காக தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# இந்தியாவிற்குள் ஊடுருவி வரும் கள்ளநோட்டுக்கள்

தாய்லாந்து நாட்டிலிருந்து டில்லி வந்த பெண்ணிடம் சோதனை மேற்கொண்ட போது அவரிடம் கள்ள ரூபாய் நோட்டுக்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இது குறித்து சுங்கத்துறையினர் அவரிடம் விசாரணை நடத்திய போது இந்த நோட்டுக்களை வியட்நாமில் ஒருவர் கொடுத்ததாகவும் அதை டில்லியில் ஒப்படைக்கும் படி தெரிவித்ததாகவும் கூறினார்.

இதை தொடர்ந்து அவரிடம் இந்திய உளவுத்துறை அதிகாரிகள் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டபோது பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுத்துறை கள்ள ரூபாய் நோட்டுக்களை அச்சடித்து இந்தியாவுக்கு கடத்துவது தெரிய வந்தது.

அந்த பணத்தை தீவிரவாதிகளுக்கு வழங்கி ஆயுதங்கள் மூலம் வன்முறை சம்பவங்களை நிகழ்த்த திட்டமிட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. (அ-2)

# காந்தியடிகளின் போதனைகளை மாணவர்கள் படிக்க வேண்டும்

(நியூயோர்க்)

காந்தியடிகளின் போதனைகளை மாணவர்கள் படிக்க வேண்டும் என மியன்மார் நாட்டின் ஜனநாயகத் தலைவர் ஆங் சான் சூகி அறிவுறுத்தியுள்ளார்.

மியன்மார் நாட்டில் தற்போது ஜனநாயக நடைமுறைகள் ஓரளவுக்கு பின்பற்றப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக சூகி வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சூகி நியூயோர்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கடந்த 21 ஆம் திகதி உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில்,

நான் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் காந்தியடிகள் மற்றும் ஜவகர்லால் நேரு ஆகியோரின் படைப்புக்களை படித்திருக்கின்றேன். இந்நூல்கள் எனக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்தது மட்டுமல்ல வழிகாட்டியாகவும் அமைந்தது. மாணவர்கள் அனைவரும் காந்தியடிகள் ஆற்றிய தொண்டினை கற்க வேண்டும்.

காந்தியடிகளுக்கு முன் இருந்தவர்கள் அகிம்சையின் மூலம் புரட்சி செய்ய முடியும் என்பதை அறிந்திருக்கவில்லை. இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்த சமகாலத்தில் தான் பர்மாவுக்கான சுதந்திரப் போராட்டத்தில் என் தந்தை ஆங் சானும் ஈடுபட்டிருந்தார்.

மார்ட்டின் லூதர் கிங், ஆங் சான் போன்றவர்கள் காட்டிய வழி தான் என் அரசியல் வாழ்க்கைக்கு தூண்டுகோலாக அமைந்தது என அவர் கூறினார். (அ-2)

# 2 ஆயிரத்து 100 இந்தியர்கள் குவைத்தில் கைதாகினர்

விசா விதிகளை மீறியது உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் தொடர்புடையதாகக் கூறி சுமார் 2 ஆயிரத்து 100 இந்தியர்கள் குவைத்தில் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளதாக அந்நாட்டுக்கான இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விசா விதி மீறல், திருட்டு, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக ஆயிரக் கணக்கான இந்தியர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 300 பேரின் உறவினர்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களில் சென்று விவரங்களைக் கேட்டு வருகின்றனர். தடுத்து வைக்கப்பட்டோரில் சிலர் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த விவகாரம் தொடர்பாக குவைத்தில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள், அந்நாட்டு அதிகாரிகளை தொடர்பு கொண்டு விபரங்களை சேகரித்து வருகின்றனர்.

குவைத் பொலிஸாரால் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டோர் இந்தியா திருப்பி அனுப்பப்படுவதுடன் மீண்டும் குவைத்துக்குள் நுழைய தடை விதிக்கப்படக் கூடும். கடந்த ஆண்டும் இதேபோல் ஏராளமான இந்தியர்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் பொதுமன்னிப்பு வழங்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை

## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தெரிவான மாகாணசபை உறுப்பினர்களுக்கான அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கான பாதுகாப்பை வழங்காது அரசாங்கம் இழுத்தடித்து வருவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணசபைத்தேர்தல் நிறைவடைந்து 15 நாட்களாகியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாகாணசபை உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்காமல் அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றது.

வேட்புமனுத்தாக்கல் செய்த காலம் தொட்டு இன்றுவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இது குறித்து நாங்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்திருந்தோம். அவர் எங்களை பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கும்படி கூறினார். நாங்கள் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தோம். ஆனால், பொலிஸ்மா அதிபர்,பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அனுமதி கிடைத்தால் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கான பாதுகாப்பை வழங்க முடியும் எனக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தைப்பொறுத்தவரை அவர்களுடன் இணைபவர்களுக்கு மாத்திரம்தான் பாதுகாப்பு வழங்க முடியும். ஏனையவர்களுக்கான பாதுகாப்பை வழங்க முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்காது அவர்களை தொடர்ச்சியாக அச்சுறுத்துவதன் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்திவிடலாம் என்று அரசாங்கம் கனவு காண்கின்றது.

கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் நாங்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். பல பாராளுமன்ற உறுப்பினர்களை பலி கொடுத்துள்ளோம். எனவே அரசாங்கத்தின் இந்த குள்ளநரித்தனத்திற்கு நாங்கள் விலைபோகமாட்டோம்.

தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையிலே எங்களுக்கான பாதுகாப்பை வழங்க வேண்டிய கடமை பொலிஸ்மா அதிபருக்குள்ளது. அதை வழங்குமாறே நாங்கள் கேட்கின்றோமே தவிர சலுகைகளை கேட்கவில்லை என்றார். (அ-2)

## பயிற்சிப்பட்டறை

(சாவகச்சேரி)

சாரணர் நிகழ்ச்சித்திட்டஉதவி மாவட்ட ஆணையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளை புதன்கிழமை மீரிகமவில் நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பில் உதவி மாவட்ட ஆணையாளர் கு.சுமுகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.(அ-9-29)

## தமிழக மீனவர் ஒருவர் இலங்கையில் உயிரிழப்பு

இலங்கைக் கடல் எல்லையில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர் ஒருவர் நேற்று காலை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழக மீனவர்கள் ஐந்து பேரை கடற்படையினர் அண்மையில் கைது செய்திருந்தனர். குறித்த ஐந்து மீனவர்களில் ஒருவரே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் தமிழகம் இராமநாதபுரம் மாவட்டத்தைச்சேர்ந்த தங்கராஜ் என தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

## மலையாளபுரத்திற்கு இந்தியா வீட்டுத்திட்டம்

(சிவநகர்)

இந்திய அரசின் உதவியுடனான வீட்டுத்திட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மலையாளபுரம் கிராமமும் இணைக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் 560 குடும்பங்கள் வசிக்கின்றன. இவற்றில் முதற்கட்டமாக 255 பயனாளிகளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வீடமைப்புத்திட்டத்திற்கான முதலாவது கட்ட கொடுப்பனவு மகாத்மாகாந்தியின் பிறந்ததினமாகிய ஒக்டோபர் 2 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

பொன்நகர், பாரதிபுரம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம் ஆகிய நான்கு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டபோதிலும் எவ்வித வீடமைப்புத்திட்டங்களும் கிடைக்கப்பெறாத மலையாளபுரம் கிராமத்தை தெரிவு செய்து வீட்டுத்திட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்திய தூதுவராலயம் இலங்கை அரசுடன் இணைந்து யூ.என்.கபிரற் மேற்பார்வையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-254)



புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினூடாக புனர்வாழ்வு அதிகாரசபையானது ஒருங்கிணைந்த நிவாரணத்திட்டத்தின் கீழ் வன்செயலால் பாதிப்படைந்த 49 பேருக்கு வீடமைப்புக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு வவுனியா பறண்நட்டகல் கிராமத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் நட்டஈட்டுக் கொடுப்பனவு காசோலைகள் அமைச்சரினால் பயனாளிக்கு வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: பூந்தோட்ட செய்தியாளர்.)

## சட்டவிரோத உபகரணம் பாவிப்பு; 8 மீனவர்களுக்கு அபராதம் விதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறு கடற்பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி 3 படகுகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 8 மீனவர்கள் முல்லை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் 8 பேரும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் கடந்த 12 ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து எட்டுப்பேருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா வீதம் 32 ஆயிரம் ரூபாவை அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும் மீனவர்கள் பயன்படுத்திய சுருக்கு வலைத் தொகுதி, 2 ஜெனரைற்றர்கள் மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள் என்பன நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு தடைசெய்யப்பட்ட தொழிலில் ஈடுபடுவோருக்கு எதிராக தொடர்ந்தும் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.(அ-9-267)

## மீள்குடியேற்றம் முழுமையானது

### மீள்குடியேற்ற அமைச்சு பெருமிதம்

இறுதிக்கட்ட போர் காரணமாக இடம்பெயர்ந்து மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 185 பேர் நேற்றைய தினம் மீள்குடியேற்றத்திற்காக முல்லைத்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பேருந்துகள் மூலம் இவர்கள் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பேனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்கள் இன்றைய தினம் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றப்படவுள்ளனர். இடம்பெயர்ந்த இந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் முழுமையாக குடியேற்றப்பட்டுவிட்டதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

இறுதிக்கட்ட போரில் இடம்பெயர்ந்து சுமார் 3 இலட்சம் மக்கள் கடந்த 3 வருடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சு கூறியுள்ளது. (அ-2)

## சொற்பொழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கந்தையா வீதியிலமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் சுகவாழ்வும் மன ஆரோக்கியமும் எனும் தலைப்பில் நாளை புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

உலக சுகாதார நிறுவன இணைப்பாளரும் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளருமானடாக்டர் க. சிவராஜா சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.(அ-9-29)

## முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 12 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மகாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் தா.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் பிரேரிக்கப்படவுள்ள பிரேரணைகளும் கேட்கப்படவுள்ள கேள்விகள் பற்றிய அறிவித்தல்களும் எதிர்வரும் 28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சங்கத்தின் செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றும் சகல அங்கத்தவர்களும் தாபன விதிக்கோவை அத்தியாயம் XXV பிரிவு 2:1 இன் பிரகாரம் ஒரு நாள் கடமை விடுமுறைக்கு உரித்துடையவர்களாவர் என்பதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளதாக பொதுச் செயலாளர் லயன்.ஜெயசங்கர் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மகிழ்ச்சி நல்ல செயல்களைச் செய்து முடிக்கும் போதுதான் வரும்
-பெஞ்சமின் பிராங்கிளின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பச்சிளம் குழந்தை உயிர்ப் பிச்சை கேட்கிறது இங்கோ மாடப்புறாவுக்கு கோபுரம் உருவாகிறது

ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றை ஆவணப்படுத்தத் தவறியது மட்டுமல்ல, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளவுமில்லை என்பது நாம் செய்த வரலாற்றுத் தவறு.

வரலாறுகளிலிருந்து கற்றல் இடம்பெற வேண்டும் என்ற தத்துவங்கள் எங்களிடம் படுதோல்வி கண்டுவிட்டது. இதனாலேயே எங்கள் வரலாறு முழுவதும் தோல்வியாகியுள்ளது.

இத் தோல்வியை சரிப்படுத்த வேண்டுமாயின், சம காலத்திலேனும் வரலாற்றிலிருந்து படித்துக் கொள்வது மிகவும் அவசியம்.

அவ்வாறுபடித்தல்என்றமுடிவைஎடுத்துக்கொண்டால், மற்றவர்கள் தருவார்கள் என்று எதிர்பார்த்திருப்பதை முதலில் நாம் தூக்கி எறிய வேண்டும்.

நாங்கள் தான் எங்களுக்குத் துணை. எங்களால் முடியும் என்ற விடயங்களில் எங்களிடம் அதீத நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

இத்தகைய நம்பிக்கையின் மத்தியில் தான் நாங்கள் இதுகாறும் நம்பியிருந்த நம்பிக்கையீனங்களை தெரிந்து கொள்ள முடியும்.

நம்பிக்கையீனங்களை நம்பிக்கையாகக் கொண்ட மிகப்பெரிய வரலாறு எங்களுக்குச் சொந்தமானது. எனவே நம்பக் கூடாதவற்றை நம்பிக் காலம் கடத்தும் மடமைத்தனத்தை எரித்தாக வேண்டும்.

அவ்வாறான எரிப்பு நடைபெறும்போது அரசியல் சின்னத்தனங்கள் என்ற சுழல் காற்று கடுமையாக வீசி எரிப்பை தணிக்க முற்படும்.

கூடவே எரிப்புக்கு பல்வேறு விமர்சனம் கூறும். ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பின்புலம், முன்புலம் என்று பெயர் சூட்டும் சம கால பண்பாட்டை பிரயோகிக்கும்.

இதற்கெல்லாம் ஈடுகொடுத்து எங்களில் நாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

வன்னியில் இன்று வரை எத்தனையோ குடும்பங்கள் இருக்க வீடின்றி படாப்பாடு படுகின்றன.

வீட்டுத்திட்டம்வரும். அதில் இலங்கை அரசின் வீடு, இந்தியாவின் வீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மூன்று ஆண்டுகள் தறப்பாளுக்குள் வாழ்ந்தாயிற்று.

ஓ! என் இனிய தமிழினமே! நீ கோயில் கட்டுவதற்கு செய்த செலவில் ஒரு வீதத்தைக் கொடுத்திருந்தால், எங்கள் புலம் பெயர் உறவுகள் ஒரு வீட்டுக்கு ஒரு வீடு என்று கட்டித்தந்திருந்தால் எங்கள் வன்னி உறவுகள் உங்கள் கொடையின் பெருமையைச் சொல்லிச்சொல்லி ஆறுதல் அடைந்திருப்பர்.

ஆனால் நீங்களோ மாடப்புறாவுக்கு கோபுரம் கட்டிக் கொடுக்கிறீர்கள். ஓ! மாடப் புறாவின் போகத்து இசையும் அதன் எச்சத்தின் வாசமும் இறைவனுக்கு இனியவை அல்லாவிடினும் உங்களுக்குப் பிடித்தமானவை போலும்.

அதோ தறப்பாளுக்குள் பச்சிளம் குழந்தை பச்சை விறகின் புகையில் மூச்சுவிட முடியாமல் உயிர்ப்பிச்சை கேட்கிறது.

நாங்கள் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று பாவம் சேர்க்கிறோம்.

# காணிகளை இராணுவம் சுவீகரித்தால் உயர் நீதிமன்றில் விண்ணப்பிக்க முடியும்

## முன்னாள் காணி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேவைக்கு அதிகமாக தனியார் காணிகளை இராணுவம் சுவீகரித்தால் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினை அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்புரிமை 17இன் கீழ் உயர்நீதி மன்றத்தில் விண்ணப்பிக்க முடியும் என முன்னாள் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் கதிர்காமத்தம்பி குருநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச காணிகளை இராணுவத்தினர் சுவீகரிப்பதானால் காணி சுவீகரிப்பு நடவடிக்கையிலேயே எடுக்க முடியும். அரசாங்கம் சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் அதன் பிரிவு 5இன் கீழ் சுவீகரிக்க முடியும்.

வடக்கில் பல காணிகளை உயர் பாதுகாப்பு வலயமாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். சுவீகரிப்பு நடைமுறை பின்பற்றப்படாமல் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அந்தக் காணிகளை வைத்திருக்க முடியாது.

மேலும் வடக்கில் இராணுவம் குறைக்கப்பட வேண்டும் என நல்லிணக்க ஆணைக்குழுவும் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையும் வலியுறுத்தியுள்ளது.

காரணமின்றி இராணுவத்தினை இங்கு வைத்திருக்கவும் முடியாது. உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள காணிகளைச் சுவீகரிக்கவும் முடியாது.

அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தியவர்கள் அழிக்கப்பட்ட பின்பு இராணுவப் படைகளை அதிகரிக்க முடியாது குறைக்க வேண்டும்.

அவர்கள் தமது இஷ்டத்துக்கு அரச காணிகளாக இருந்தாலும் சரி தனியார் காணிகளாகவும் இருந்தாலும் சரி சுவீகரிக்க முடியாது.

சட்டத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு முறையில் அரச காணி ஒன்றினை சுவீகரிப்பதானால் அரச காணிச்சட்டத்தின் கீழ் இலக்கம் 8.1947 இன் கீழ் (454 - அத்தியாயம்)

ஒரு அரச காணியை ஆயுதப்படைகளுக்கு வழங்க காணி ஆணையாளர் சிபார்சு செய்து ஜனாதிபதியினால் வழங்கப்படும் பாராதீனம் கட்டளை மூலமே பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக விண்ணப்பம் செய்தல் வேண்டும். அதாவது குறித்த காணியுள்ள பிரதேச செயலர் ஊடாக காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும். பின்பு மாவட்ட காணிப் பயன்பாட்டுக்குழு (மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு) அங்கீகரிக்க வேண்டும். இந்த நடைமுறையிலேயே அரச காணியை சுவீகரிக்க முடியும்.

மேலும் தனியார் காணிகளை காணி உரிமையாளர்க்கு நஷ்ட ஈடுகொடுத்து ஆயுதப் படைகளுக்கு அரசாங்கம் வாங்கிக் கொடுக்க முடியும்.

ஆனால் சுவீகரிப்பு மிகக் குறைந்தளவிலேயே அதாவது தேவைக்கு குறைவாகவே எடுக்கலாம். வீண் விரயம் செய்ய முடியாது. அவ்வாறு தேவைக்கு அதிகமாக தனியார் காணிகளைச் சுவீகரித்தால் உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினை தாக்கல்செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# வர்த்தகரை தாக்கிவிட்டு 20 இலட்சம் கொள்ளை

(கரவெட்டி)

வர்த்தகர் ஒருவரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த 20 இலட்சம் ரூபாய்பணத்தினைக் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் வடமராட்சி தொண்டைமானாறு பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் சிறு வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திவரும் இராசதுரை ரவீந்திரன் (வயது 36) என்பவர் தனது வர்த்தக நிலையத்தில் இருந்து நெல்லியடியில் உள்ள வங்கியொன்றில் வைப்பில் இடுவதற்காக முச்சக்கரவண்டியில் 20 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் பணத்துடன் பயணித்துள்ளார்.

பின்னர் வங்கியில் 7 ஆயிரம் ரூபாய் பணத்தை மட்டும் வைப்பிலிட்டுவிட்டு மிகுதிப்பணத்துடன் அச்சுவேலியில் அமைந் துள்ள தனது வீட்டிற்கு தொண்டைமானாறு வீதியூடாக முச்சக்கர வண்டியில் சென்றவேளை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இனந்தெரியாத இருநபர்கள் இவரை வழிமறித்து கடுமையாகத்தாக்கியதோடு அவரிடமிருந்த 20 இலட்சம் ரூபாய் பணத்தையும் அபகரித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

மயங்கிய நிலையில் வீதியில் காணப்பட்ட வர்த்தகரை அப்பகுதி மக்கள் மீட்டு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (அ-2-9-24)

# கிளி.மேலதிக அ.அதிபருக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கரவெட்டி)

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீநிவாசன் வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நெல்லியடி முடக்காடுப் பகுதியிலுள்ள இவரது வீடு கடந்த வெள்ளிக்கிழமை கொள்ளையர்களால் சல்லடை போட்டு தேடப்பட்டது.

அத்துடன் சுவாமியறைக் கதவு உடைக்கப்பட்டதுடன் அங்கிருந்த 5 ஆயிரம் ரூபா பணமும் களவாடப்பட்டதுடன் கொள்ளையர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

மீண்டும் நேற்று முன்தினம் இரவு கொள்ளையர்களால் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வீட்டைச் சுற்றித் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து ரோந்துப் பணிமூலம் மேலதிக அரசாங்க அதிபர் வீட்டிற்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-9-24)

## புற்றுநோய் சிகிச்சை நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய் வைத்திய நிபுணரின் நடமாடும் சிகிச்சை அடுத்த வாரம் முதல் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டாவது புதன்கிழமையும் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 4ஆவது புதன் கிழமையும் காலை நேரத்தில் சிகிச்சையளிக்கப்படும்.

காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் 4ஆவது புதன்கிழமை பிற்பகல் [illegible] [illegible]

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இதோ அந்த சொல்




முப்பத்து மூன்று கோடி புராண தெய்வங்களிடமும் நம்பிக்கை இருந்தாலும் உங்களிடத்தில் நம்பிக்கை இல்லாவிட்டால் பயனில்லை.


நீங்கள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். மண்ணுலகத்தின் தெய்வங்கள். அழியாத திருவரு ளைப் பெற்ற நீங்கள் செம்மறி ஆடுகளைப் போல் திரியவேண்டாம்.

ஓராயிரம் முறை உங்கள் இலட்சியத்தைக் கைக் கொள்ளுங்கள். ஆயிரம் முறை தோல்வியுற்றாலும் மீண்டும் ஒருமுறை முயற்சி செய்யுங்கள். போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாமல் இலட்சியத்தை நோக்கி நடைபோடுங்கள்.

அறியாமைக்குவியல் மீது வெடிகுண்டைப்போல் வெடிக்கும் சொல் எது என்றால் அஞ்சாமை என்பதுதான். வேத வேதாந்தங்களின் சாரமெல்லாம் அந்த ஒரு சொல்லிலேயே அடங்கியிருக்கிறது. உபநிடதங்களும் இதையே சொல்கிறது. வலிமையே வாழ்விற்கு மகிழ்ச்சியையும் நிரந்தரமான வளத்தையும் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணக் கல்லூரியால் அண்மையில் ஆனந்தரத்தினம் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம்.



யா/நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் அன்பரசன் கஜானி 13 வயது பெண்கள் குண்டு போடுதலில் முதலாம் இடத்தினையும் 50 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.



யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் ஸ்ரீதரன்-சுபெனேசன் 10 வயது ஆண்கள் தலைக்கு மேலால் பந்து எறிதலில் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

# மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி; சென்.அன்ரனிஸ், சென்.விக்டரிஸ் வெற்றி

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் 10 ஓவர்கள் கொண்ட மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட்சுற்றுப்போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.36 போட்டிகளைக் கொண்ட போட்டியில் 13 ஆவது போட்டியானது சென்.அன்ரனிஸ் அணிக்கும் கிளிநொச்சி அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் அணியினர் 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணி சார்பாக அணித் தலைவர் சுகந்தன் 13 பந்துகளில் 22 ஓட்டங்களையும் அகிலன் 9 பந்துகளில் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிளிநொச்சி அணி சார்பாக அனட்திலக்சன் 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் பாபு 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் துசாந்தன் 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி அணியினர் 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி அணி சார்பாக றேகன் 11 பந்துகளில் 13 ஓட்டங்களையும் அனுசன் 8 பந்துகளில் 9 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றனர். பந்து வீச்சில் சென்.அன்ரனிஸ் அணி சார்பாக பிரதீப் 4 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் லஜீப், அகிலன், ஜோசியஸ் மற்றும் சுகந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

14 ஆவது போட்டியானது சென்ஜோசப் அணிக்கும் சென்.விக்டரிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோசப் அணியினர் 10 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சென்.ஜோசப் அணி சார்பாக நிர்மல் 22 பந்துகளில் 21 ஓட்டங்களையும் டனியல் 14 பந்துகளில் 18 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றனர். பந்துவீச்சில் சென். விக்டரிஸ் அணி சார்பாக விவேக் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் மெர்லின் 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.விக்டரிஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 5.3 ஓவர்களில் இலக்கு இழப்பு எதுவுமில்லாமல் சென்.விக்டரிஸ் அணியினர் 10 இலக்குகள் வித்தியாசத்தில் அதிரடி வெற்றியினை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் சென்.விக்டரிஸ் அணிசார்பாக அணித்தலைவர் அஜித் 19 பந்துகளில் 41 ஓட்டங்களையும் ஜெர்சன் 14 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

# தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் போட்டி







(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சினதும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினதும் வடமாகாண விளையாட்டுத் துறையினதும் ஏற்பாட்டில் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்டமாக வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 21 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியானது அண்மையில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன், வேலணை பிரதேச செயலக கிராமசேவை உத்தியோகத்தர்களான சோ.பத்மரூபன், எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இப்போட்டியில் வீரர்களை தெரிவு செய்யும் முகமாக யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் பா.முகுந்தன், வேலணை பிரதேச பதில் விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.மயூரன், ஊர்காவற்றுறை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்கண்ணா, வேலணை பிரதேச செயலக கிராமசேவை உத்தியோகத்தர் தி.கோகுலரூபன், வேலணை பிரதேச உதைபந்தாட்ட வீரர்களான மு.சிவநேசன் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களைத் தெரிவு செய்தார்கள்.

இப்போட்டியில் முதல் அரை இறுதியில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் 4:1 ரீதியில் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது. மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது. இறுதி ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் வேலணை துறையூர் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற ரீதியில் வெற்றி வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக் கொண்டது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி இன்று கிளிநொச்சிக்கு வருகை



(கிளிநொச்சி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சியில்அமைக்கப்பட்டுள்ள உப மின் நிலையத்தை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வில் அவர் பற்கேற்கவுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டிடத் தொகுதியை திறந்து வைக்கவுள்ள ஜனாதிபதி, கிளிநொச்சி வைத்திய சாலைக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

மேலும் அவர், முல்லைத்தீவில் மீள்குடியேற்ற மக்களுடனான சந்திப்பையும் மேற்கொள்ளவுள்ளார். (எ-8)

## மழையால் போட்டி பாதிப்பு

உலகக்கிண்ண இருபது-20 போட்டித் தொடரின் 11-வது லீக் ஆட்டம் மேற்கிந்தியத் தீவுகள்-அயர்லாந்து அணிகளுக்கிடையில் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று நடந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 6 விக்கெட்டினை இழந்து 129 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழை காரணமாக் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இதன்காரணமாக போட்டி வெற்றி தோல்வியின்றி கைவிடப்பட மேற்கிந்தியத் தீவுகள் நிகர ஓட்ட சராசரியின் அடிப்படையில் சுப்பர் 8 வாய்ப்பை தட்டிச் சென்றது.

## ஜனநாயகம் ஏற்படுத்தப்பட...

அப்துல்கலாமின் ஆலோசகர் வெளியிட்டுள்ள இந்த அறிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தனது அறிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து வைகோ மத்திய பிரதேசத்தில் நடத்தியுள்ள போராட்டத்திற்கும் பொன்ராஜ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொன்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்திய பிரதேச மாநிலத்தில், புத்த மத பல்கலைக்கழகத்திற்கு அடிக்கல்நாட்ட வந்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கறுப்புக் கொடிகாட்டுவதற்கு தமிழகத்திலிருந்து வைகோ தலைமையில் பலர் சென்று அங்கு கைதாகியிருந்தனர். இதுபோன்ற ஒரு போராட்டம் உலக வரலாற்றில் இதுவரை நடந்ததில்லை.

இந்தப் போராட்டத்தினால், இலங்கையில் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை பிற மாநிலத்தவர்கள் உணர்ந்துள்ளனர். முன்னாள் பிரதமர் மொறார்ஜி தேசாய் காலம் முதல், இலங்கைத் தமிழர்களின் அகிம்சை வழி மற்றும் ஆயுதம் ஏந்திய போராட்டங்களில் வரலாற்றை உயர் அதிகாரிகள் திரித்து கூறி வருகின்றனர்.

### தமிழர்கள் பற்றி இராமாயணத்தில்

இதனால் பெரும்பான்மையான வடமாநிலத் தலைவர்கள், ஈழத்தமிழர்கள் இலங்கையின் பூர்வீக குடிமக்கள் இல்லை என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் புராண காலம் முதல் இலங்கையில் தமிழர்கள் வசிக்கின்றனர் என்பதை இராமாயணம் நிரூபிக்கிறது.

எனவே இலங்கை அரசின் மனித தன்மையற்ற செயலையும், ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்தையும், நாமெல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட்டு, வட மாநில தலைவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இந்தப் பணியை வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக செய்து முடிக்க வேண்டும். இல்லையென்றால், நாட்டில் முக்கிய பொறுப்புக்கு வரவுள்ள அடுத்த தலைவருக்கும், இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தை உயர் அதிகாரிகள் திரித்து கூறிவிடுவார்கள். இதனால், புதிதாக தலைமை ஏற்கும் தலைவரும், ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடக்கூடும்.

### ஒற்றுமை தேவை

இலங்கைத் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை உணர்ந்து கொள்ளும் அளவிற்கு மிகப்பெரிய தேசியத் தலைவரை காண்பது அரிதாகவுள்ளது. எனவே, தமிழக அரசியல் தலைவர்கள் ஒற்றுமையுடன் செயல்பட்டு, இலங்கையுடன் இந்தியா மேற்கொண்டு வரும் வெளிவிவகார கொள்கைகளை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும்.

ஜனநாயக முறையை அமுலுக்கு கொண்டு வர இலங்கைக்கு கொஞ்சம் கூடவிருப்பமில்லை. பொதுத்தேர்தலில், தமிழ்த் தலைவர்கள் வெற்றி பெறுவதை தடுக்கும் விதமாக, தமிழர்கள் குடியிருப்பு பகுதிகளில் எல்லாம் சிங்களவர்களை குடியமர்த்துகின்றனர்.

தமிழர்கள் ஆயுதம் ஏந்தியதற்கு, இலங்கை அரசுதான் முக்கிய காரணம். விடுதலைப்புலிகளை தவிர, உலகில் எந்தவொரு விடுதலை இயக்கமும் ஒழுக்கம், தியாகம் கொண்ட முப்படை இராணுவத்தை கொண்டிருக்கவில்லை.

### சீனா எதிர்க்காது

ஆசியாக் கண்டத்தில் மிகப்பெரிய சக்தியாக திகழும் இந்தியாவும் சீனாவும் எதிர்காலத்தில் உலக பொருளாதாரத்தின் 60 சதவீத பங்களிப்பை கொண்டிருக்கும். இதனால் இந்தியாவை ஒருபோதும் எதிரி நாடாக சீனா கருதாது. ஆனால் இலங்கையுடன் பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ள சீனா எதிர்காலத்தில் இராணுவத் தளத்தை இலங்கையில் அமைக்கும்.

எனவே இலங்கைக்கு இந்தியா உதவி செய்வதை நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அது உள்நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

அதேநேரம் இலங்கையில் அரசியல் தீர்வுகாண இந்தியா முயற்சித்தால் அதை ஒரு போதும் சீனா எதிர்க்காது. எனவே இலங்கையில் ஜனநாயகம் மலர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### ஜனநாயகம் தேவை

தமிழக அரசியல் தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை நடத்தி இந்திரா காந்திக்குப்பின் இந்திய அரசு மேற்கொண்டு வரும் வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்க செய்ய வேண்டும்.

இந்தியா மற்றும் அமெரிக்காவில் உள்ள ஜனநாயக முறையை இலங்கையில் ஏற்படுத்த வேண்டும். இது ஒன்றே இலங்கைத் தமிழர்களுக்கு நம்மால் வழங்கக் கூடிய உடனடித் தீர்வாகும்.

இதன் பின்னரும் இந்த ஜனநாயக முறையை இலங்கை அரசு ஏற்கவில்லையென்றால் தனித்தமிழீழம் அமைவதை பூமியில் உள்ள எவராலும் தடுக்க முடியாது.

அதேநேரம் தொலை நோக்கு பார்வை கொண்ட அரசியல் தலைவர் முக்கியப் பதவிக்கு வந்து இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி அமைத்து விட்டால் தனிஈழம் என்ற கனவு நிறைவேறுவது நெடுந் தொலைவில் இல்லை.

இந்தக் கனவு நிறைவேறினால் தமிழ் ஈழம், இந்தியாவின் உண்மையான நட்பு நாடாக திகழும்.

இந்த தேசத்தின் நல்ல மனிதர்களுடன் என் தனிப்பட்ட கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காக இதனைக் கூறுகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-8)

**இன்றைய போட்டி**

பங்களாதேஷ்-பாகிஸ்தான்

இரவு 7.30 மணி

## மனிக்பாம் முகாம்...

செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மனிக்பாம் இடைத்தங்கல் முகாம் மூடப்படுவதையடுத்து அங்கு கடைசியாக மிஞ்சியிருந்தவர்களில் மந்துவில் பகுதியில் மீள்குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மகிழ்ச்சியடைந்திருந்தனர்.

அதேவேளை, தமது சொந்த கிராமத்திற்கே செல்ல வேண்டும் என்பதற்காகப் போராடி வந்த கேப்பாப்பிலவு பகுதி மக்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர்களை வேறிடத்திற்கு குடியேற்றப் போவதாக அதிகாரிகள் அறிவித்திருப்பதையடுத்து, அவர்கள் மிகவும் கவலையடைந்திருக்கின்றார்கள்.

கேப்பாப்பிலவு பகுதி மக்களின் கவலைகளைச் சுட்டிக்காட்டி, அந்தப்பகுதி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றத்திற்கு வழி செய்யலாமே என வன்னி மாவட்ட இராணுவத் தளபதி பொனிபஸ் பெரேராவிடம் கேட்டபோது, தேசிய பாதுகாப்பை முன்னிட்டு, அதனை இப்போது செய்ய முடியாதிருக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

மனிக்பாம் மூடப்படுவதையடுத்து, உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு விட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் உறவினர், நண்பர்கள் மற்றும் பதிவு செய்யப்படாத முகாம்களில் இருப்பதாக தொண்டு நிறுவன பணியாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, இடம்பெயர்ந்தவர்களில் எத்தனை பேர் இன்னும் அவர்களது சொந்த காணிகளுக்கு இன்னும் திரும்பிச் செல்ல முடியாதிருக்கின்றனர் என்ற சரியான அதிகாரபூர்வமான தகவல்கள் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். (எ-8)

## கிழக்கு மாகாண சபை...

குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் நிதி திட்டமிடல்,சட்டம் ஒழுங்கு, மாகாண நிர்வாகம், சுற்றாடல் ;மீள்குடியேற்றம் மற்றும் உள்ளூராட்சி கிராம அபிவிருத்தி ஆகிய துறைகளை பெற்றுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த எம்.ஐ.எம்.மன்சூருக்கு சுகாதாரம்,உள்நாட்டு மருத்துவம்,விளையாட்டு,உணவு விநியோகம் மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், கூட்டுறவு சமூக சேவைகள் ஆகிய துறைகள் கிடைத்துள்ளன.

செய்னுலாப்தீன் அகமட் நஷீருக்கு விவசாயம்,கால்நடை அபிவிருத்தி,சுற்றாடல், கிராமிய கைத்தொழில் மற்றும் மீன்பிடித்துறை ஆகிய துறைகள் கிடைத்தன.

தேசிய காங்கிரஸைச் சேர்ந்த உதுமான் லெப்பைக்கு வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பு, நிர்மாணத்துறை, கிராமிய மின் மற்றும் நீர்வழங்கல் ஆகிய துறைகள் மீண்டும் கிடைத்திருக்கின்றன.

விமலதீர திஸாநாயக்கவுக்கு கல்வி, காணி,காணி அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் பண்பாட்டு அலுவல்கள் ஆகிய துறைகள் மீண்டும் கிட்டியுள்ளள.

கடந்த மாகாண சபையில் அமைச்சர் பொறுப்புக்களை வகித்திருந்த முன்னாள் மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன்,அமைச்சர்களான எம்.எஸ். சுபைர், துரையப்பா நவரட்ணராஜா ஆகியோருக்கு இம்முறை அமைச்சர் பொறுப்புகள் கிடைக்கவில்லை.

இதேவேளை, மூவின மக்களும் வாழும் மாகாணம் எனக் கருதப்படும் கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவருக்கும் அமைச்சர் பொறுப்புக் கொடுக்கப்படாதது குறித்து பொதுவாக தமிழ் மக்கள் மத்தியில் கவலை வெளியிடப்படுகிறது. (எ-8)

## மன்மோகன் சிங்...

தொடர்பாக ஏற்புடைய தீர்வொன்றை விரைந்து காணுமாறு இந்தியா வலியுறுத்தியதாக ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டிருந்தது. (எ-8)

## இராணுவத்தின் ...

பொலிஸாரும் பெருமளவிலான இராணுவமும் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறானதோர் சூழ்நிலையில் எம்மீது என்ஜன் ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டது. கல்வீச்சு இடம்பெற்றது.

அனைத்தும் இராணுவப் பாதுகாப்புடனேயே இடம்பெற்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்று வெள்ளை வான் கடத்தலுக்குப் பதிலாக கல் வீச்சும், என்ஜின் ஒயில் வீச்சும் மக்கள் மீது நடத்தப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. இவ்வேலைக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.09.2012 தொடக்கம் 05.10.2012 பி.ப. 4.00 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 08.10.2012 மு.ப.10.00 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 08.10.2012 மு.ப. 10.30 மணி
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டலின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை "தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்" என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(VAT, NBT நீங்கலாக) | இருக்கவேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | Construction of Floor Area at Thirunelvely Market | 14,750.00 | 500.00 | M08/C09 |
| 02 | Construction work of Road, Culvert&Channel in Maniyanthoddam | 18,750.00 | 500.00 | M08/C09 |

திரு.ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(C-1153)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகல்விமாணி பரீட்சை பெறுபேறு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தால் நடத்தப்பட்ட முது கல்வி மாணி (M Ed) கற்கைநெறி (2010/ 2011) பரீட்சை பெறுபேறுகள் நேற்றுவெளியான தாக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் முதுகல்விமாணி பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டமை குறித்து துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், உயர்ப்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், கற்கைநெறியின் இணைப்பாளர் கலாநிதி த.கலாமணி, கல்வியியற்துறை தலைவர் கலாநிதி திருமதி அ.சத்தியசீலன் மற்றும் கல்வியியற்துறை விரிவுரையாளர்கள், கல்வி சாரா உத்தியோகத்ர்களுக்கு முதுகல்விமாணி கற்கைநெறி மாணவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (ஙு)

# அவுஸ்திரேலியா செல்லமுற்பட்ட 48 பேருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி பொலிகண்டி கடற்பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை படகொன்றில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 46 சந் தேக நபர்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பொலிகண்டி கடற்பரப்பில் சம்பவ தினம் அதிகாலை 1.30 மணிக்கு படகொன்றில் 46 பேரும் வேறொரு படகில் பயணிப்பதற்கு முற்பட்ட வேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-24)

# தமிழக மீனவர் வெலிக்கடையில் உயிரிழப்பு

இலங்கை கடல் எல்லையில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் கடந்த 8 ஆண்டுகளாக கொழும்புக்கு அருகேயுள்ள வெலிக்கடை சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 2004ஆம் ஆண்டு மண்டபம் கடற்பகுதியில் இருந்து இலங்கைக்கு நாட்டுப் படகில் போதைப் பொருட்கள் கடத்தியதாக இராமநாதபுரத்தைச் சேர்ந்த 2 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இவர்களில் 62 வயதான தங்கராசு என்பவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இவரது இறப்புக்கு காரணம் மாரடைப்பு எனக் கூறப்பட்டுள்ளது. (எ-8)

## அரசுடன் பேசு ...

வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவது வரவேற்கப்பட வேண்டியது என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (எ-8)

## கடற்படைத் தளபதி ...

வீரர்களின் மரியாதை அணி வகுப்பு இடம் பெற்றது.

அட்மிரல் திஸாநாயக்க நாளை கடற்படைத்தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். புதிய தளபதியாக ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## கூட்டமைப்பு உறு ...

முன்னதாக 11 உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்திலிருந்து ஊர்வலமாக கடற்படைத்தள வீதி வழியாக திருகோணமலை நகர மண்டபத்திற்கு அழைத்து செல்லப்படுவர். (எ-8)


# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும்

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

எனும் சமூக சேவை அமைப்பில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

♦ நிர்வாக உத்தியோகத்தர்

(இருபாலாரும், ஓய்வுபெற்ற அரச/ தனியார் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வயது 45 இற்கு மேல்)

♦ முகாமைத்துவ உதவியாளர்கள்

(இருபாலாரும், கணனி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். வயது 30 - 45)

**பொதுத் தகைமை**

சமூக சேவை நோக்கம் கொண்டவராக இருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

பொருத்தமான தகைமை உடையவர்கள்

விளம்பர இல. சி-1156
மே/பா வலம்புரி
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு தொலைபேசி இலக்கம் உட்பட தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

இயக்குநர் சபை

(C-1156)

# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் நமசிவாயம் கமலம்

கடந்த 28.08.2012 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் நமசிவாயம் கமலம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 27.09.2012 வியாழக்கிழமை நடைபெறும். அந்தத் தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் : 20.12.1926
மறைவு : 28.08.2012

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி
T.P.: 0778998637 (472)

குடும்பத்தினர்
ந.கமலக்கண்ணன்

# ௨ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சந்திரசேகரம் பவானிதேவி



அன்பெனும் சொல்லிற்கே அடையாளமாகி நின்றீர்
அரவணைத்து எமையெல்லாம் அன்புமழை பொழிந்து நின்றீர்
உண்மை அன்பின் உருவமாய் இமயமாய் உயர்ந்து நின்றீர்
வாழ்வில் நாம் உயர்வடைய கலங்கரை விளக்கானீர்
தனிமையில் எமை விட்டு எங்கேதான் சென்றீர் நீர்?



தோற்றம் -18.08.1956
மறைவு -19.09.2010

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

[சி-1154]


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org